கல்லூரியின் 13-வது ஆண்டு பயணம்

# ஆண்டு மலர் 2018 - 19



## பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி

ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்




சங்கே முழங்கு சங்கே முழங்கு
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று
சங்கே முழங்கு சங்கே முழங்கு
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ்என்று சங்கே முழங்கு

**- பாவேந்தர் பாரதிதாசன்**

# மனதில் உறுதி வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும் ;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் ;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்,
பெண் விடுதலை வேண்டும்,
பெரியகடவுள் காக்க வேண்டும் ;
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும் ;
உண்மை நின்றிடவேண்டும்:
ஓம் ஓம் ஓம் ஓம்

## Our Pillars of Strength



**Dr. P. Manisankar**
Vice Chancellor
Bharathidasan University



**Dr. G. Gopinath**
Registrar
Bharathidasan University



**Dr. T. Malarvili**
Principal
Bharathidasan University
Constituent college for Women

## பாரதிதாசன் பல்கலைக்கழக கருத்துரு பாடல்

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம் (புதிய)

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
"இது எனதெ"ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம் (புதிய)

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
"ஒரு பொருள் தனி" எனும் மனிதரைச் சிரிப்போம் (புதிய)

இயல் பொருள் பயன் தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம் (புதிய)

**- பாவேந்தர் பாரதிதாசன்**

**Bharathidasan University Constituent College for Women**

**Orathanadu, Thanjavur District**

**பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி**
**ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்**



**முனைவர். தே. மலர்விழி** **M.Sc., B.Ed., M.Phil., Ph.D**
**முதல்வர்**

"உன்னை,
இந்த வாழ்க்கை
எனக்கு மட்டுமன்று
உனக்கே, எப்பொழுதேனும்
உணர்த்தியதுண்டா ?" - இன்குலாப்

வாழ்வோ வாக்கோ பெண் என்பதாலேயே புறமொதுங்கவோ புறக்கணிக்கப்படவோ சூழல் எழாவண்ணம் காத்திரமாகத் தன்னையும், தன் சூழலையும் ஆளுமை செய்வதில் தெளிவு வேண்டும். அறிவென்பது சமூகத்திலிருந்து விட்டு விடுதலையாக்கும் கருவியல்ல. தடைகளைக் கட்டுடைக்கவும் மானுட வெள்ளத்தில் சங்கமித்திருக்கவும் உதவும் ஓர் அபூர்வ கருவி. போலவே மொழியும் கலையும்.

கலைகள் எவ்வடிவிலிருந்தாலும் மாதிரி வாழ்வை முன்வைப்பதாக இருக்கவேண்டும். செயலூக்கம் நிறைந்த எம் கல்லூரி பேராசிரியர்கள், மாணவியர் தம் படைப்புகள் பொருளாழம் மிக்கவை என்பதில் மனம் நிறைகின்றேன். "எல்லா ஆற்றல்களும் உன்னுள்ளே நிறைந்திருக்கின்றன" எனும் விவேகானந்தர் வாக்கினுங்கிணங்க சுயம் உணர்ந்து முன்னேறினால் வெற்றி நிச்சயமாகும். ஒரத்தநாடு பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி தனது 13-வது ஆண்டில் இனிதே பீடுநடை போட்டு, கிராமப்புற மாணவிகளை கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டு, கோலமிடுதல், மருதாணி வரைதல், ஆடல், பாடல், நாடகம் உள்ளிட்ட பல்வேறு திறமைகளையும் வெளிக்கொணர்ந்து, ஊக்குவித்து அவர்களை வெற்றியாளர்களாக மாற்றுவதையே இலக்காகக் கொண்டு இயங்கிவருகிறது. இவ்வாண்டு மலர் சிறந்த முறையில் உருவாகப் பங்களித்த அனைத்துத் துறையினருக்கும், பேராசிரியர்களுக்கும், மாணவியருக்கும் வாழ்த்துகள்.

இத்தொகுப்பை நேர்த்தியாக வடிவமைத்து சிறப்பான முறையில் வெளியிடுவதற்காக மிகுந்த சிரத்தையோடு உழைத்து தற்போது வாசித்துக் கொண்டிருக்கும் உங்களிடம் கொண்டுவந்து சேர்க்க உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என்னுடைய பாராட்டுகளும் நன்றிகளும்.

**முதல்வர்**

# ஆண்டு மலர் ஆசிரியக்குழு



**முனைவர் தே. மலர்விழி**
முதல்வர் & தலைவர்



**முனைவர் ஆ. சிவகாமி**
மலராசிரியர்
& சமூகப்பணித் துறைத் தலைவர்



**திருமதி. எஸ். வனிதா**
இணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை



**முனைவர் பி. ஜெயலட்சுமி**
துணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை



**திருமதி. ஆர். சாமுண்டீஸ்வரி**
துணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை



**திருமதி. எம். கார்த்திகா**
துணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை



**திருமதி. எம். சந்திரா**
துணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை



**திருமதி. வி. ரேகா**
துணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை



**திருமதி. டி. சுகாசினி**
துணையாசிரியர்
& விரிவுரையாளர், சமூகப்பணித் துறை

# உள்ளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | கல்லூரியின் குறிக்கோள் | 2 |
| 3 | கல்லூரியின் வளர்ச்சி | 2 |
| 4 | பாடப்பிரிவுகள் | 3 |
| 5 | துறைத் தலைவர்கள் | 4 |
| 6 | கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகள் | 5 |
| 7 | கல்லூரி வளர்ச்சிக்கான குழுக்கள் | 6 |
| 8 | பல்கலைக்கழக நிதி | 7 |
| 9 | கல்வி உதவித்தொகை | 7 |
| 10 | இலவச பேருந்து பயணச்சலுகை | 8 |
| 11 | நிதியுதவி திட்டங்கள் | 9 |
| 12 | கல்லூரியில் நடந்த விழாக்கள் | |
| | • மகளிர் தினவிழா | 9 |
| | • விளையாட்டு விழா | 9 |
| | • ஆண்டு விழா | 10 |
| | • பட்டமளிப்பு விழா | 11 |
| | • சுதந்திர தினவிழா | 11 |
| | • பொங்கல் தினவிழா | 12 |
| | • குடியரசு தினவிழா | 13 |
| 13 | கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகள் | |
| | • நாட்டு நலப்பணித் திட்டம் | 14 |
| | • செஞ்சுருள் சங்கம் | 22 |
| | • இளைஞர் செஞ்சுருள் சங்கம் | 24 |
| 14 | கல்லூரி வளர்ச்சிக்கான குழுக்கள் | |
| | • உட்புற தர உத்தரவாத மையம் | 25 |
| | • அகப் புகார்க்குழு | 25 |
| | • மகளிர் மேம்பாட்டு மன்றம் | 27 |
| | • பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு மையம் | 29 |
| | • பெற்றோர் ஆசிரியர் கழகம் | 30 |
| 15 | கல்விச் சுற்றுலா | 31 |
| 16 | இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகள் | 32 |
| 17 | விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகள் | |

| | | |
|---|---|---|
| 18 | துறைகளின் செயல்பாடுகள் | |
| | • தமிழ்த் துறை | 34 |
| | • உயிர்வேதியியல் துறை | 38 |
| | • ஆங்கிலத் துறை | 39 |
| | • உயிர் தொழில்நுட்பவியல் துறை | 42 |
| | • வணிக மேலாண்மைத் துறை | 42 |
| | • வணிகவியல் துறை | 43 |
| | • கணிணி அறிவியல் & கணிணி பயன்பாட்டியல் துறை | 44 |
| | • கணிதவியல் துறை | 47 |
| | • நிலத்தியல் துறை | 48 |
| | • சமூகப்பணித் துறை | 50 |
| 19 | பல்கலைக்கழக அளவிலான மாணவிகளின் தேர்ச்சி விவரம் | 53 |
| 20 | பல்கலைக்கழக அளவில் மாணவிகளின் தரவரிசை பட்டியல் | 54 |
| 21 | நமது கல்லூரியில் பயின்று முனைவோர் பட்டம் பெற்றவர்கள் | 56 |
| 22 | பேராசிரிய சாதனையாளர்கள் | 57 |
| 23 | ஆசிரியர் மேம்பாட்டு திட்டம் | 59 |
| 24 | முனைவோர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் | 60 |
| 25 | முனைவோர் பட்டம் பெறுவதற்கு ஆய்வேடு சமர்ப்பித்த பேராசிரியர்கள் | 61 |
| 26 | கல்லூரியின் காலச்சுவடுகள் | 63 |
| 27 | பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரை வெளியீடுகள் | 65 |
| 28 | பேராசிரியர்களின் கைவண்ணம் | 81 |
| 29 | மாணவியரின் கைவண்ணம் | 96 |

# 13-வது ஆண்டு அறிக்கை

## கல்லூரியின் பயணம் 2018-19

## முன்னுரை

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்*
*இளைப்பில்லை காண்*

- பாவேந்தர் பாரதிதாசன்

பெண்கள் அனைவரும் கல்வியறிவு உடையவர்களாக விளங்கவேண்டும் என்பது பாவேந்தரின் கருத்து.

பெண்களுக்கு கல்வி வேண்டும் குடித்தனம் பேணுவதற்கே !
பெண்களுக்கு கல்வி வேண்டும் மக்களைப் பேணுவதற்கே !
பெண்களுக்கு கல்வி வேண்டும் உலகினைப் பேணுவதற்கே !
பெண்களுக்கு கல்வி வேண்டும் கல்வியைப் பேணுவதற்கே !

என்று பெண்கல்வியின் இன்றியமையாமையை உணர்த்திய கவிஞர் தொடர்ந்து “கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம். அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை. கல்வியுடைய பெண்கள் திருந்திய கழனி அங்கே நல்லறிவுடைய மக்கள் விளைவது நவிலவோ நான் ? என்று பெண்கள் கல்வியறிவு உடையவர்களாக இருப்பின் அவர்கள் பெற்றுப்பேணும் இளைய தலைமுறையும் வளமையுறும் என்பதை அறிவுறுத்துகின்றார் பாரதிதாசன்.

ஒரத்தநாட்டில் தமிழக அரசும் பாரதிதாசன் பல்கலைக்கழகமும் இணைந்து உருவாக்கிய பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி இன்று கல்விப்பணியில் சிறந்து, கிராமப்புற மாணவிகள் உயர்க்கல்வி பெறவேண்டும் என்று கல்லூரி துவங்கப்பட்டதன் நோக்கத்தை

செவ்வனே அடைந்துவருகிறது. ஒரத்தநாடு பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரியானது தந்தை பெரியாரின் பிறந்த நாளான 17 செப்டம்பர் 2006-ல் துவங்கப்பட்டது. பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் முதன் முதலில் பெண்களுக்கு என்று துவங்கப்பட்ட கல்லூரி என்ற சிறப்பை பெற்றது நம் கல்லூரி. இன்று 14 இளநிலைப் பிரிவுகள், 6 முதுநிலைப்பிரிவுகள், 2 ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு மற்றும் 5 முனைவர் பட்ட ஆராய்ச்சித் துறைகளுடன் 128 ஆசிரியர்கள், 27 அலுவலகப் பணியாளர்கள், 3452 மாணவியர்களுடன் ஆல்போல் வேரூன்றி தன் கல்விச்சேவையைச் சிறப்பாக ஆற்றிவருகிறது.

## கல்லூரியின் குறிக்கோள்

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள கிராமப்புற மாணவிகளுக்கு தன்னம்பிக்கை, தைரியம், படைப்பு சிந்தனைகள் சிறக்க வாய்ப்புகளை வழங்கியும், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் சிறந்து விளங்க, கல்வி மற்றும் சக்தியாக்கம் வழியாக அவர்களை தயார் செய்வதும், சமூக அக்கறையுள்ள குடிமக்களாக உருவாக்குவதுமே கல்லூரியின் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

## கல்லூரியின் வளர்ச்சி

துவக்கத்தில் வாடகைச் சத்திரம் கட்டிடத்தில் இயங்கிவந்த கல்லூரி தற்போது 33 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள சொந்த நிலத்தில் அழகான கட்டிடங்களில் வகுப்பறைகள் செயல்பட்டுவருகின்றன. உயிர் தொழில்நுட்பவியல், நுண்ணுயிரியல், கணிணி அறிவியல், இயற்பியல், நிலத்தியல் ஆகிய துறைகளின் ஆய்வகங்கள் செவ்வனே இயங்கிவருகின்றன. கல்லூரியின் நூலகத்தில் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் பிரிவுகளைச் சார்ந்த 7100-க்கும் அதிகமான புத்தகங்கள் மற்றும் ஆய்வேடுகள் உள்ளன.

பல்கலைக்கழக மானியக்குழுவின் 2f மற்றும் 12B அங்கீகாரத்தை கல்லூரி பெற்றுள்ளது. கல்லூரி வளாகத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதி மாணவிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

## பாடப்பிரிவுகள்

| இளங்கலை | முதுகலை |
|---|---|
| **பி.ஏ**<br>• தமிழ்<br>• ஆங்கிலம்<br>• வரலாறு<br>**பி.பி.ஏ**<br>• வணிக நிர்வாகம்<br>**பி.காம்**<br>• வணிகவியல்<br>**பி.எஸ்.டபிள்யூ**<br>• சமூகப்பணி<br>**பி.சி.ஏ**<br>• கணிணி பயன்பாட்டியல்<br>**பி.எஸ்.சி**<br>• உயிர்நுட்பவியல<br>• உயிர்வேதியியல்<br>• கணிணி அறிவியல்<br>• நிலத்தியல்<br>• கணிதவியல்<br>• நுண்ணுயிரியல்<br>• இயற்பியல் | **எம்.ஏ**<br>• தமிழ்,<br>• ஆங்கிலம்<br>**எம்.காம்**<br>• வணிகவியல்<br>**எம்.எஸ்.டபிள்யூ**<br>• சமூகப்பணி<br>**எம்.சி.ஏ**<br>• கணிணி பயன்பாட்டியல்<br>**எம்.எஸ்.சி**<br>• கணிணி அறிவியல் |
| **ஆய்வியல் நிறைஞர்** | **ஆராய்ச்சித் துறைகள்** |
| **எம்.ஃ.பில்**<br>• தமிழ்,<br>• ஆங்கிலம் | **பி.ஹெச்.டி**<br>• தமிழ்<br>• ஆங்கிலம்<br>• உயிர்வேதியியல்<br>• சமூகப்பணி<br>• வணிகவியல் |

## தற்போதைய மாணவ சேர்க்கை

இவ்வாண்டு கல்லூரியில் மொத்தம் 3452 மாணவிகள் சேர்க்கை பெற்று பயின்று வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| இளநிலை | : | 3,135 |
| முதுநிலை | : | 521 |
| ஆய்வியல் நிறைஞர் | : | 6 |
| முனைவர்பட்ட ஆய்வு | : | 34 |

## துறைத் தலைவர்கள்

| வ.எண் | துறை | பேராசிரியர்கள் |
|---|---|---|
| 1 | உயிர்வேதியியல் துறை | முனைவர் சி. மணிமேகலை |
| 2 | ஆங்கிலத் துறை | முனைவர். எம். பிரேமாவதி |
| 3 | தமிழ்த் துறை | முனைவர் கே.ஆர். சரளா |
| 4 | சமூகப்பணித் துறை | முனைவர் ஆ. சிவகாமி |
| 5 | வணிகவியல்துறை | முனைவர் கே. கலைச்செல்வி |
| 6 | கணிணி அறிவியல் மற்றும் கணிணி பயன்பாட்டியல் துறை | திருமதி. எஸ். ரோஜா |
| 7 | வணிக நிர்வாகத் துறை | திருமதி. எம். இளம்பிறை |
| 8 | வரலாற்றுத் துறை | திருமதி. எஸ். மணிமேகலை |
| 9 | கணிதவியல் துறை | திருமதி. பி. கலைச்செல்வி |
| 10 | இயற்பியல் துறை | முனைவர். கே. நித்யாதேவி |
| 11 | உயிர்நுட்பவியல் துறை | முனைவர். கே. கற்பகம் |
| 12 | நுண்ணுயிரியல் துறை | திருமதி. எஸ். உமாதேவி |
| 13 | நிலத்தியல் துறை | முனைவர். சித்ரா |

## கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகள்

### நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)



முனைவர். எம். பிரேமாவதி



முனைவர் கே.ஆர். சரளா



திருமதி. எஸ். ரோஜா



**செஞ்சுருள் சங்கம் (RRC)**

முனைவர் எஸ். ஜெயசீலா



**இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (YRC)**

முனைவர். கே. கலைச்செல்வி

## கல்லூரி வளர்ச்சிக்கான குழுக்கள்



**உட்புற தர உத்தரவாத மையம்**
**&**
**பெற்றோர் ஆசிரியர்கள் சங்கம்**

முனைவர் சி. மணிமேகலை



**ஆலோசனை & மனஅழுத்த மையம்**
**&**
**மகளிர் மேம்பாட்டு மன்றம்**

முனைவர் கே.ஆர். சரளா



**ஆலோசனை & மனஅழுத்த மையம்**

**மகளிர் மன்றம் &**

**தொழில் முனைவோர் மற்றும் திறன் வளர்ச்சி மையம்**



**பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு**

**&**

**கலாச்சார ஒருங்கிணைப்பாளர்**



**அகப்புகார் குழு**

முனைவர். டி.வி. சுமதி





**முன்னாள் மாணவியர் சங்கம்**

முனைவர் கே.ஆர். சரளா &

திருமதி. எஸ். உமாதேவி





**விளையாட்டு குழு**

முனைவர். என் கஜேஸ்வரி &

முனைவர். பி. கலைச்செல்வி



**ராகிங் தடுப்பு மையம்**

முனைவர்.கே. கற்பகம்



**ஒழுங்கமைப்பு குழு**

திருமதி. எஸ். வனிதா



**பொது தொடர்பு அலுவலர்**

முனைவர். டி.வி. சுமதி

## பல்கலைக்கழக நிதி

2018-19 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக நிதி நல்கையில் அனைத்து துறைகளிலும் கருத்தரங்கம் மற்றும் பயிலரங்கம் நடத்துவதற்கு ரூ.15,000/- பெறப்பட்டது. மேலும் கல்லூரியின் ஆய்வகத்திற்கு வேதிப்பொருட்கள் வாங்குவதற்கு ரூ.1,00,000/- மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.2,00,000/- மற்றும் மேஜை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ.25,000/- வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வியாண்டில் நமது கல்லூரிக்கு ரூபாய் 1,00,000/- மதிப்பில் சுமார் 560 புத்தகங்கள் வாங்கப்பட்டு நம் கல்லூரி நூலகம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ரூ.35,000/- மதிப்பில் 16 இதழ்கள் மற்றும் தினசரி நாளிதழ்கள் வாங்கப்பட்டுள்ளன.

நமது பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் அவர்களும், பதிவாளர் அவர்களும் நம் கல்லூரிமீது மிகுந்த அக்கறைகொண்டு நாம் கேட்கும் உதவிகளை எல்லாம் உடனடியாகச் செய்து கொடுப்பவர்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## கல்வி உதவித்தொகை

2018-19 கல்வியாண்டில் 785 ஆதிதிராவிட மாணவிகளுக்கு ரூ.46,13,182/-, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 2,348 மாணவிகளுக்கு ரூ.42,79,983/- அரசு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

## இலவச பேருந்து பயணச்சலுகை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் 3,585 மாணவிகளுக்கு இலவச பேருந்து பயணச்சீட்டு வழங்கியுள்ளது.

## நிதியுதவி திட்டங்கள்

### நிறைவு பெற்றவை

பல்கலைக்கழக மானியக்குழு நிதியுதவியுடன் கட்டப்பட்ட மகளிர்விடுதி மேலும் மேம்படுத்தப்பட்டு மாணவிகளின் பயன்பாட்டில் உள்ளது.

தமிழ் துறையைச் சார்ந்த முனைவர் ஜெயசீலா எழுதிய ”எம்.வி. வெங்கட்ராமின் புதினங்களில் பன்முகம்” என்ற நூலுக்கு மைசூர் இந்திய மொழிகளின் நடுவன் நிறுவனத்தில் ரூ.30,000- நிதி கிடைக்கப் பெற்றது.

மத்திய தமிழ்ச் செம்மொழி நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் டி.வி. சுமதி ஒருங்கிணைத்த ”சங்க இலக்கியத்தில் அளபெடைச் சொற்கள்” என்னும் திட்டத்திற்கு ஜூன் 2018-ல் ரூ.40,000/- பெறப்பட்டது.

தமிழ்நாடு மாநில திட்டமிடல் ஆணையத்தின் நிதியுதவியுடன் சமூகப்பணிதுறைத் தலைவர் முனைவர் ஆ.சிவகாமி ஒருங்கிணைத்த “தஞ்சாவூர் மாநகராட்சிக்கான முன்னோக்கு திட்டம்“ என்ற திட்டமானது நிறைவுற்று அதன் இறுதி தவணையான ரூ.50,000/- செப்டம்பர் 2018-ல் பெறப்பட்டது.

### நடைபெறுபவை

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் ஆண்டுதோறும் ரூ.1,25,000/- நிதி வழங்கிவருகிறது. இளநிலை மூன்றாம் ஆண்டு மாணவிகளுக்கு கூடுதல் பயிற்சி அளிக்கும் விதமாக Special Care for Slow Learner Scheme திட்டம் ஆறாம் ஆண்டாக இந்த ஆண்டும் கல்லூரியில் வெற்றிக்கரமாக நடத்தப்பட்டு வருகிறது. இதில் 864-க்கும் மேற்பட்ட மூன்றாம் ஆண்டு மாணவிகள் பயன்பெற்றனர்.

# கல்லூரியில் நடந்த விழாக்கள்

## மகளிர் தினவிழா




2018 மார்ச் 8 அன்று நடந்த உலக மகளிர் தினவிழாவில் சென்னை எழுத்தாளர் திருமதி சாலின் மனோஜ்குமார், தஞ்சாவூர் இன்னர்வீல் கிளப்பின் மாவட்டத் தலைவர் திருமதி.உஷாநந்தினி விஸ்வநாதன், மற்றும் தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவ மனையைச் சார்ந்த மகப்பேறு மருத்துவர் திருமதி. தென்றல் அவர்களும் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் தே.மலர்விழி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். பின்னர் உலக மகளிர் தின விழாவிற்காக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசளித்தனர். தொடர்ந்து மகளரிர் பட்டிமன்றம் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர். ஜெயசீலா தலைமையில் நடைபெற்றது.

## விளையாட்டு விழா




07.03.2018 அன்று நடைபெற்ற கல்லூரி விளையாட்டு விழாவில் திருச்சிராப்பள்ளி இருப்புப்பாதை காவல் கண்காணிப்பாளர் திருமதி.Z. ஆனிவிஜயா ஐ.பி.எஸ். அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். மேலும் இவ்விழாவில் சென்னை மாநிலக்கல்லூரியைச் சார்ந்த

முனைவர்.க.அருணாசலம் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். மாணவிகளின் அணி வகுப்பை பார்வையிட்டு அவர்களின் மரியாதையை சிறப்பு விருந்தினர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாணவிகளிடையே நடத்தப்பட்டு வெற்றிபெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.





## ஆண்டு விழா

கல்லூரி ஆண்டு விழா 2018 மார்ச் 9 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி மாவட்ட மகேந்திரகிரி இந்திய விண்வெளி ஆய்வுமைய இயக்குநர் விஞ்ஞானி சா. பாண்டியன் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு உறுப்பினரும், அதிராம்பட்டினம் காதர் மொகிதீன் கல்லூரியின் முதல்வருமாகிய முனைவர். எ. முகமது முனைதீன் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் தே. மலர்விழி




அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் கல்லூரியின் ஆண்டுமலரை சிறப்பு விருந்தினர்கள் வெளியிட்டனர். மேலும் மாணவிகளுக்கு General Proficiency-க்கான பரிசுகளும், பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## பட்டமளிப்பு விழா

11.04.2018 அன்று நடந்த கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர். ஜி. கோபிநாத் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். கல்லூரி முதல்வர் முனைவர் தே. மலர்விழி அவர்கள் அவ்வருடத்தின் ஆண்டறிக்கையை வாசித்தார். பெண்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சிறப்பு விருந்தினர் தனது



சிறப்புரையில் மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் கல்லூரியின் 14 துறையைச் சார்ந்த இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டம்பெற்ற 1,054 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

## சுதந்திர தினவிழா

நாட்டின் 73-வது சுதந்திர தினவிழா கல்லூரி மைதானத்தில் 15 ஆகஸ்டு 2019 அன்று கொண்டாடப்பட்டது. காலை 8.45 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர் தே.மலர்விழி தேசியக்கொடியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார். நாட்டுநலப்பணித் திட்ட



மாணவிகளின் அணிவகுப்பு நடைபெற்றது. விழாவின் முத்தாய்ப்பாக மாணவியரின் தேச ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.



## பொங்கல் தினவிழா

2019 ஜனவரி 12 அன்று கல்லூரியில் பல்வேறு துறைகள் சார்பாக பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. கல்லூரி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் தே.மலர்விழி அவர்கள் தலைலை வகித்தார். பொங்கல் பானை வைத்து மாணவிகள் பொங்கலிட்டனர். பொங்கல் பானை பொங்கி வரும்போது “பொங்கலோ பொங்கல்“ என்று கூறி குலவையிட்டு விழாவை களைகட்ட செய்தனர். பாரம்பரிய உடை அணிந்து மாணவிகளும், பேராசிரியர்களும் விழாவில் கலந்துகொண்டனர். மாணவிகள் தங்கள் கை வண்ணத்தில் விதவிதமான வண்ணங்களில் கோலமிட்டனர்.









## குடியரசு தினவிழா

இந்தியாவின் 70-வது குடியரசு தினவிழா கல்லூரியின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தே.மலர்விழி அவர்கள் தலைலை வகித்து, மாணவிகளின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார். பின்னர்





தேசியக்கொடியை ஏற்றிவைத்து மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார். பல்வேறு துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் சிறப்புரையாற்றினர். இவ்விழாவில் திரளான மாணவிகளும், பேராசிரியர்களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.



## கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகள்

### நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)




**சர்வதேச யோகா தினம்** : நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக சர்வதேச யோகா தின விழாவை முன்னிட்டு 21.06.2018 அன்று கல்லூரி முதல்வர் முனைவர். தே. மலர்விழி அவர்கள் தலைமையில் யோகா அறக்கட்டளை தலைவர் முனைவர். டி. இராமசாமி அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் யோகா மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும், மாறில சுத்திகரிப்பு மேலாண்மை போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் 300-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



**மாதவிடாய் சுகாதார மேலாண்மை** : மாதவிடாய் சுகாதார மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி 29.06.2018 அன்று கல்லூரியில் நடைபெற்றது. இதில் மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் இளைஞர் உயிரணு கூட்டமைப்பு மற்றும் ஷீரடி ஸ்ரீசாய்பாபா சேவா செயற்திட்டமும் இணைந்து நாட்டுநலப்பணி மாணவிகளுக்கு மாதவிடாய் சுகாதார மேலாண்மை பற்றிய விழிப்புணர்வும், அதையொட்டி போட்டிகளும் நடத்தப்பட்டு மாணவிகளுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

**கண்பரிசோதனை முகாம்** : நமது கல்லூரியின் நாட்டுநலப்பணித் திட்டம் சார்பாக இரண்டு நாள் கண்பரிசோதனை மற்றும் பராமரித்தல் முகாம் 9.08.2018 மற்றும் 10.08.2018 ஆகிய இருநாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமை தாங்கினார்.



லயன்ஸ் கிளப் தலைவர் திரு. ரமேஷ் அவர்களும், வாசன் கண் பரிசோதனை மையத்தைச் சார்ந்த திரு. ராஜ்குமார் அவர்களும் கலந்து கொண்டு கண் பரிசோதனை, பராமரித்தலின் முறை மற்றும் அதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தனர். இதில் 1500-ம் மேற்பட்ட மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**நாட்டுநலப்பணித் திட்ட ஒருமுகப்படுத்துதல்** : 09.08.2018 அன்று நாட்டு நலப்பணித் திட்ட ஒருமுகப்படுத்துதல் நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் தலைமையில் தஞ்சை சரபோஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் முனைவர் சித்திரவேல் அவர்கள் நாட்டுநலப்பணித் திட்டம் பற்றியும், அதன் தோற்றம் மற்றும் சமூகத்தில் அதன் பங்கு பற்றியும் எடுத்துரைத்தார்.



**தூய்மை பாரதம் நிகழ்ச்சி** : 13 மற்றும் 14 ஆகஸ்டு 2018 நாட்களில் தூய்மை பாரதம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு கல்லூரி முதல்வர் தலைமையில் கல்லூரி சுத்தம், பிளாஸ்டிக்கை தவிர்த்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. பின்பு கல்லூரி வளாகம் முழுவதும் தூய்மை செய்யப்பட்டது.





**சுதந்திர தினவிழா** : 15.08.2018 அன்று நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பாக சுதந்திர தினவிழா கல்லூரியில் நடைபெற்றது. பல்வேறு துறைப் பேராசிரியர்கள் சுதந்திர போராட்ட வீரர்களின் வரலாறு, முக்கியத்துவம், மாணவர்களின் பங்கு பற்றி எடுத்துரைத்தனர்.

**Swach Pledge** : 5.09.2018 அன்று நாட்டுநலப்பணித் திட்ட மாணவிகள் தூய்மை உறுதிமொழியைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எடுத்துக்கொண்டார்கள்.




**மகாத்மா காந்தியின் பிறந்தநாள்** : 5.09.2018 அன்று மகாத்மா காந்தியின் 150-வது பிறந்தநாள்விழாவினை முன்னிட்டு மகாத்மா காந்தியின் குறும்படக் காணொளி மூலம் அவர் வாழ்க்கை வரலாறு மாணவிகளுக்கு காட்டப்பட்டது.



**ஆசிரியர் தினவிழா** : செப்டம்பர் 5, 2018 அன்று ஆசிரியர் தினவிழா கொண்டாடப்பட்டு ஆசிரியரின் பங்கு, தொண்டு மற்றும் சேவைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.



**நாட்டுநலப்பணித் திட்ட தினவிழா** : செப்டம்பர் 24 அன்று நாட்டுநலப்பணித் திட்ட தினவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நாட்டுநலப்பணி பாடல் மற்றும் அதன் உட்கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் அவர்கள் சிறந்த நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகளை பாராட்டி கௌரவித்தார்.



**புதிய வாக்காளர் சேர்ப்பு முகாம்** : செப்டம்பர் 24 2018 அன்று புதிய வாக்காளர் சேர்ப்பு முகாம் கல்லூரி முதல்வர் அவர்கள் துவங்கிவைக்க திரு. ரமேஷ், வட்டாட்சியர் மற்றும் திரு.பூவந்திநாதன் துணை வட்டாட்சியர் ஆகியோர் மாணவிகளுக்கான வாக்காளர் அட்டை விண்ணப்ப படிவம் மற்றும் அதனை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதலை வழங்கினார்.






**குடியரசு தினவிழா அணிவகுப்பு** : குடியரசு தின விழா அணிவகுப்பிற்கு மாணவிகளுக்கான தேர்வு செப்டம்பர் 20-ம் தேதி நடைபெற்றது. பல்கலைக்கழக விதிமுறைகள் படி மாணவிகளை தேர்ந்தெடுத்து அடுத்த கட்ட தேர்விற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**தலைமைப் பண்புகள் வளர்த்தல்** : 25.10.2018 அன்று தலைமைப் பண்புகள் வளர்த்துக் கொள்ளும் நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முனைவர். கவிதா, உதவிப் பேராசிரியர் மற்றும் திரு.கார்த்திகேயன், சமூகப்பணியாளர் கலந்துகொண்ட ஆளுமை பண்புகள் அதனை வளர்த்துக்கொள்ளும் விதம், நேர்மறை எண்ணங்கள் ஆகியவை பற்றி எடுத்துரைத்தார்.



**வளர்இளம் பருவத்திற்கான தன்னம்பிக்கை நிகழ்வு** : 26.09.2018 அன்று நாட்டுநலப்பணித் திட்டம் மற்றும் கல்லூரி குறைதீர்க்கும் ஆலோசனை மையம் இணைந்து வளர்இளம் பருவத்திற்கான தன்னம்பிக்கை நிகழ்ச்சியை நடத்தியது. கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையேற்று வளர்இளம் பருவத்தின் முக்கியத்துவம், வாழ்க்கைமுறை குறித்து எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக திருமதி.உஷாநந்தினி அவர்கள் கலந்து கொண்டார்.







**மனநல மற்றும் தற்கொலை தடுப்பு நிகழ்ச்சி** : 26.09.2018 அன்று நாட்டுநலப்பணித் திட்டம் மற்றும் கல்லூரி குறைதீர்க்கும் ஆலோசனை மையம் இணைந்து தற்கொலை தடுப்பு நிகழ்ச்சியை நடத்தின. சிறப்பு விருந்தினராக Dr.மங்கையர்க்கரசி கலந்துகொண்டு மனநலத்தின் முக்கியத்துவம், மனநோய்கள், அதிலிருந்து மீள்வது ஆகியவை குறித்து விளக்கினார்.

**மது மற்றும் போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி** : நாட்டுநலப்பணித் திட்டம்



மற்றும் லயன்ஸ் கிளப் இணைந்து 27.09.2018 அன்று காந்தியின் பிறந்தநாளை ஒட்டி மது போதை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வட்டாட்சியர் திரு.ரமேஷ், ஒரத்தநாடு அரசு மருத்துவர் Dr.வெற்றிவேந்தன் மற்றும் ஒரத்தநாடு துணை வட்டாட்சியர் திரு.பூவந்திநாதன் கலந்துகொண்டனர்.

**வாக்காளர் விழிப்புணர்வு பேரணி** : நாட்டுநலப்பணித் திட்டம் மற்றும் லயன்ஸ் கிளப் இணைந்து 27.09.2018 அன்று காந்தியின் பிறந்தநாளை ஒட்டி




வாக்காளர் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக வட்டாட்சியர் திரு.ரமேஷ், ஒரத்தநாடு அரசு மருத்துவர் Dr.வெற்றிவேந்தன் மற்றும் ஒரத்தநாடு துணை வட்டாட்சியர் திரு.பூவந்திநாதன் கலந்துகொண்டனர். நமது வாக்கின் முக்கியத்துவம், தேர்ந்தெடுத்தல் போன்ற விழிப்புணர்வு, சுவரொட்டி மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

**இரத்ததான ஆலோசனை** : 28.09.2018 அன்று இரத்ததானம் பற்றிய



அறிவுரையில் சத்துள்ள உணவுகள் உண்ணுவது குறித்தும், கொழுப்பு மற்றும் துரித உணவை உட்கொள்வதன் விளைவுகள் குறித்தும் கூறப்பட்டது. பெண்கள் 50 கிலோ எடை குறையாமல் இருக்கவேண்டும். மாதவிடாய் 7 நாட்களுக்கு முன்பும், பின்பும் இரத்ததானம் செய்வதைத் தவிர்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

**இளைஞர் எழுச்சியுணர்வு தினம்** : 15.10.2018 அன்று முன்னாள் குடியரசுத் தலைவர் APJ அப்துல் கலாம் பிறந்தநாள் இளைஞர் எழுச்சியுணர்வு தினமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் தலைமையில் காவல்துறை ஆய்வாளர் திரு.சுரேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சமூகத்தில் மாணவிகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும் அவர்களின் சுயஅடையாளம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.





**பாம்புகடி பற்றிய விழிப்புணர்வு** : பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக பேராசிரியர் கால்நடை கல்லூரியின் மருந்தியல் மற்றும் நச்சுயியல் துறைப் பேராசிரியர் முனைவர் செந்தில்குமார் அவர்கள் கலந்துகொண்டு பாம்பு கடிப்பதால் ஏற்படும் ஆபத்து மற்றும் முதலுதவி பற்றி எடுத்துரைத்தார்.

**ஊழல் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு** : ”ஊழலை ஒழித்து புதிய இந்தியாவை உருவாக்குவோம்” என்ற தலைப்பில் 29 அக்டோபர் முதல் 3 நவம்பர் வரை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுமக்களிடம் விழிப்புணர்வை உருவாக்குதல், அவர்களின் பங்கேற்பை உறுதிசெய்தல் ஆகியவை குறித்து உறுதிமொழிகள் எடுக்கப்பட்டன.



**தன் சுத்தம்** : 17.10.2018 அன்று பட்டுக்கோட்டை MCC கல்லூரியின் முன்னாள் உயிர்வேதியியல் துறை பேராசிரியர் சுகந்தி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தன்சுத்தம், தலை முதல் கால் வரை எவ்வாறு பேணுவது என்பது குறித்து விளக்கினார்.



**டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு** : 30.10.2018 அன்று டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ராஜா மிராசுதார் மருத்துவமனை Dr. வெற்றிவேந்தன் சிறப்புரை ஆற்றினார். டெங்கு ஏற்படும் காரணங்கள் குறித்தும், டெங்கு வராமல் தடுப்பது பற்றியும் எடுத்துரைத்தார்.

**பெண்கள் மற்றும் மாதவிடாய் சுகாதாரம்** : பெண்கள் மற்றும் மாதவிடாய் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு 31.10.2018 அன்று கல்லூரி முதல்வர் தலைமையில் கல்லூரி உயிர்வேதியியல் துறை தலைவர் முனைவர். சி. மணிமேகலை சிறப்புரையாற்றினார். மாதவிடாய் பிரச்சனைகள் குறித்தும், அக்காலக்கட்டத்தில் அழுக்கு மற்றும் சுகாதார துணிகளைப் பயன்படுத்துவதன் நன்மை தீமைகள் பற்றிய பல தகவல்களை வழங்கினார்.




**தேசிய ஒற்றுமை தினம்** : 31.10.2018 அன்று தேசிய ஒற்றுமை தினம் கடைபிடிக்கப்பட்டு நமது நாட்டின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பை வலுப் படுத்துவதற்கும், நமது அர்ப்பணிப்புகளை வழங்குவதற்கும் தகவல்கள் மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.



# செஞ்சுருள் சங்கம் (RRC)

## தொழுநோய் முகாம்

02.07.2018 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி ஒரத்தநாடு செஞ்சுருள் சங்கமும், தொண்டராம்பட்டு ஆரம்ப சுகாதார மையமும் இணைந்து தொழுநோய் கண்டறிதல் கணக்கெடுப்பு ஒரத்தநாட்டில் அண்ணாநகர், தெற்கு முஸ்லீம் தெரு, பள்ளிவாசல் தெரு, யானைக்காரத்தெரு போன்ற இடங்களில் நடத்தப்பட்டன. இதில் செஞ்சுருள் சங்க மாணவியர் 28 பேர் கலந்து கொண்டு 784 வீடுகளில் தொழுநோய் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டனர். இதில் ஏழு நபர்கள் சந்தேகத்திற்கு இடமாகவும், மூன்று நபர்களுக்கு உறுதி செய்யப்பட்டும், நான்கு நபர்களுக்கு தொழுநோய் அதிகத் தன்மையுடனும் இருப்பது கண்டறியப்பட்டது. தொண்டராம்பட்டு ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து மருத்துவர் எஸ்.இந்திரா, மேற்பார்வையாளர்கள் ரா.சுரேஷ்குமார், க.பாஸ்கரன், ப.செல்வம், எம்.திருப்பதி, செவிலியர் எஸ்.ஜெயசீலி போன்றோர் பங்கு பெற்றனர். செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் சு.ஜெயசீலா, செஞ்சுருள் சங்க உறுப்பினர் எஸ்.கலைச்செல்வி மாணவியரை ஒருங்கிணைத்து அழைத்துச் சென்றனர்.



## எய்ட்ஸ் விழிப்புணர்வு

பாரதிதாசன் பல்கலைக் கழக உறுப்பு பெண்கள் கல்லூரி செஞ்சுருள் சங்கமும், வெங்கடேஸ்வரா அறக் கட்டளையும் இணைந்து 21.12.2018 அன்று எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியும் சொற்பொழிவும் நடத்தப்பட்டது.



இதில் தஞ்சாவூர் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மைய மேலாளர் பசுபதீஸ்வரன், ஒரத்தநாடு அரசு மருத்துவர் வெற்றிவேந்தன், தஞ்சாவூர் மாவட்ட மேலாளர் கதிரேசன் ஆகியோர் எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துரைத்தனர்.



BHARATHIDASAN UNIVERSITY CONSTITUENT COLLEGE FOR WOMEN, ORATHANADU

RED RIBBON CLUB

AIDS AWARENESS PROGRAMME

VENKATESHWARA TRUST, THANJAVUR

We cordially invite you for the WORLD AIDS DAY-2018

**Dr.S.Jeyasheela**
Coordinator. Red Ribbion Club
**Welcomes**

**DR.T.MALARVILI**
Principal
Bharathidasan University Constituent College for Women, Orathanadu
**Presides**

**Special Speech**
**by**
**Mr.R.RARBINDRAN, PO.TSUTANSACS**

**Dr.V.Vetrivanthan** MBBS. D.Diab. Govt. Hospital Orathanad.

**Mr. V.Kathirasan**, Director-Thanjavur District

**Dr.S.Kalaiselvi**
Member, Red Ribbon Club
**Renders, Vote of Thanks**

**Date :** 21.12.2018 **Time :** 9.30 am

**Venue: Seminar Hall**






.



Govt of India
Ministry of Youth Affairs & Sports &
NEHRU YUVA KENDRA, THANJAVUR, SOCIAL HEALTH EMPOWERMENT (SHE)
RED RIPPAN CLUB BHARATHIDASAN UNIVERSITY COLLEGE, (FOR WOMEN)
SANKALP SE SIDDHI
YOUTH EMPOWERMENT PROGRAMME FOR NEW INDIA
Date : 28.12.2018 Friday Time : 9.00 pm
Venue : Bharathidasan University Constituent College For Woman, Orathanadu Block.

| | |
|---|---|
| Prayer | : Programme Participants |
| Welcome Address | : Dr. G. Jagathiswari, Secretary<br>Social Health Empowerment (SHE) Thanjavur. |
| Presidential Address | : Mr. S. Bharath,<br>Youth Co-Ordinater, Nehru Yuva Kendra, Thanjavur |
| | : Mr. P. Pounraj Accountant, NYK, Thanjavur |
| Chief Guest Address | : Dr. T. Malarvili, Principal,<br>Bharathidasan University Constituent College for Women, Orathanadu. |
| Special Address On Poverty Free India | : Dr. K. Kalai Selvi<br>HOD, Dept. of Commerce, Orathanadu |
| Special Address Clean India | : Dr. Sivagami<br>HOD, Dept. of Social work, Orathanadu |
| Special Address Castestan | : Dr. L. Baskaran<br>HOD, Dept. of English, Raja Sarfoji College, Thanjavur. |
| Special Address Topic Nutrition for Por Adolescent girls | : Dr. K. Bhuvaneswari<br>Dept. of Bio-Chemistry, Orathnadu. |
| Vote of Thanks | : Dr. S. Jeyasheela<br>RRC Co-Ordinater, Dept. of Tamil, Orathanadu. |
| National Anthem | : |

*All are Invite :*

*Social Health Empowerment (SHE)*
*Red Rippan Club Bharathidasan University Constituent College For Woman.*

*Nehru Yuva Kendra, Thanjavur.*



### மகாத்மா காந்தியின் 150 வது பிறந்தநாள் விழா

நேருயுவகேந்திரா, தஞ்சாவூர், சமூகநலச் சங்கம் (SHE), தஞ்சாவூர், கல்லூரி செஞ்சுருள் சங்கம் இணைந்து மகாத்மா காந்தியின் 150-வது பிறந்தநாள் விழா 28.12.2018 அன்று கொண்டாடப்பட்டது. கருத்தரங்கைக் கல்லூரி முதல்வர் தெ.மலர்விழி தொடங்கி வைத்துப்பேசினார். இதில் நேருயுவகேந்திரா ஒருங்கிணைப்பாளர் S.பாரத், கணக்காளர், பி.பவுள்ராஜ், மகாத்மாகாந்தி குறித்து சிறப்புரையாற்றினார். வறுமையில்லா இந்தியா குறித்து முனைவர். க.கலைச்செல்வி வணிகவியல் துறைத்தலைவரும், தூய்மை இந்தியா பற்றி முனைவர் எ.சிவகாமி சமூகப் பணித்துறைத்தலைவரும், சாதியற்ற தன்மை பற்றி முனைவர் எல்.பாஸ்கரன் ஆங்கிலத்துறை சரபோஜி கல்லூரி உதவிப்பேராசிரியரும் சிறந்த ஊட்டச்சத்துக்கள் பற்றி முனைவர் க.புவனேஸ்வரி உயிர்வேதியில் துறை உதவிப்பேராசிரியரும் உரையாற்றினார்கள். கருத்தரங்கினைச் செஞ்சுருள்சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு.ஜெயசீலா, சமூகநலச் சங்கம் (SHE) செயலாளர் முனைவர் கோ.ஜெகதீஸ்வரி வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர் ஏற்பாடு செய்தனர்.



### இளைஞர் செஞ்சுருள் சங்கம் :

சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி பேரணியும், தூய்மை இந்தியா இயக்கத்தின் ஒரு நிகழ்வாக, பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி, பெண்களின் கல்வி பற்றிய ஒரு சிறப்பு விரிவுரை நடத்தப்பட்டது.









## கல்லூரி வளர்ச்சிக்கான குழுக்கள்

### உட்புற தர உத்தரவாத மையம்

நம் கல்லூரியில் IQAC 2015-ம் ஆண்டு முதல் செயல்பட துவங்கியது. கல்லூரி துவங்கிய ஐந்து வருடத்திலேயே ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் கல்லூரி 2F and 12B தகுதியை பல்கலைக்கழக மானியக்குழுவிடம் இருந்து பெற்றது. மேலும் கல்லூரியை மேம்படுத்த IQAC பிரிவு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் கணிணிகள், அலுவலக உபகரணங்கள் பெற்று இயங்கி வருகின்றது. துறைக்கு ஒரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். கல்லூரியின் IQAC ஒருங்கிணைப்பாளராக முனைவர். சி. மணிமேகலை, உயிர்வேதியியல் துறைத் தலைவர் செயல்பட்டு வருகிறார்.

### அகப் புகார்க்குழு

கல்லூரியின் அகப் புகார்க்குழு (Internal Complaints Committee - ICC), தஞ்சை மாவட்ட சமூகநலச் சங்கத்துடன் இணைந்து "பணியிடங்களில்



பெண்களுக்கேற்படும் பாலியல் வன்முறைகள்'' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கினை நடத்தியது. தமிழ்த்தாய் வாழ்த்துடனும் பாவேந்தரின் கருத்துப்பாடலுடனும் தொடங்கப்பட்ட அக்கருத்தரங்கில் புகார்க்குழுவின் அலுவல் தலைவரும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியருமான முனைவர் தே.வீ.சுமதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த கல்லூரி முதல்வர் முனைவர் தே.மலர்விழி அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

கருத்தரங்கில் நான்கு தலைப்புகளில் உரை நிகழ்த்தப்பட்டது. அகப்புகார் குழு குறித்து குழு உறுப்பினரும் வணிகவியல் துறைத் தலைவருமாகிய முனைவர் க.கலைச்செல்வி அவர்கள் பன்முக நிலையில் விவரித்து பேசினார். தொடர்ந்து வழக்குரைஞர் திரு லட்சுமிகாந்தன் அவர்கள் ”இந்தியப் பெண்ணுரிமைச் சட்டங்கள்” என்ற பொருளில் உரையாற்றினார்.



அதன்பின் பாலியல் வன்முறைத் தடுப்பு குறித்து குழு உறுப்பினரும் சமூகப்பணித் துறைத்தலைவருமாகிய முனைவர் அ.சிவகாமி அவர்கள் உரை நிகழ்த்தினார்.



ஒரத்தநாடு பாரதிதாசன் பெண்கள் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் மலர்விழி பேசினார்.

ஒரத்தநாடு மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்

ஒரத்தநாடு: ஒரத்தநாடு பாரதிதாசன் பெண்கள் கல்லூரியில் 'பணியிடங்களில் பெண்களுக்கேற்படும் பாலியல் வன்முறை' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. கல்லூரியின் அகப்புகார்க்குழு, தஞ்சை மாவட்ட சமூகநலச் சங்கம் இணைந்து நடத்திய கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் மலர்விழி தலைமை வகித்தார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் சுமதி வரவேற்றார். அகப்புகார் குழு குறித்து வணிகவியல் துறைத்தலைவர் கலைச்செல்வி, இந்திய பெண்ணுரிமை சட்டங்கள் என்ற தலைப்பில் வக்கீல் லட்சுமிகாந்தன், பாலியல் வன்முறைத் தடுப்பு குறித்து சமூகப்பணித்துறை தலைவர் சிவகாமி ஆகியோர் பேசினர். இறுதியாக 'இந்தியாவில் பாலியல் வன்முறைக் கொடுமைகள்' என்ற தலைப்பில் சமூகநலச் சங்க செயலாளர் மற்றும் வரலாற்றுத் துறை ஆசிரியர் ஜெகதீஸ்வரி உரையாற்றினார். ஆங்கிலத்துறை ஆசிரியர் ராஜேஸ்வரி நன்றி கூறினார். கருத்தரங்க நிகழ்வுகளை தமிழ்த்துறை ஆசிரியர் ராஜராஜேஸ்வரி தொகுத்து வழங்கினார். மேனாள் முதல்வர் மணிமேகலை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இறுதியாக இந்தியாவில் பாலியல் வன்முறைக் கொடுமைகள் என்ற தலைப்பில் குழுவின் அமைப்பு சாரா உறுப்பினரும் சமூகநலச் சங்க செயலர் மற்றும் வரலாற்றுத் துறை ஆசிரியருமாகிய முனைவர் கோ.ஜெகதீஸ்வரி அவர்கள் உரையாற்றினார். முடிவில் ஆங்கிலத்துறை ஆசிரியர் திருமதி இராஜேஸ்வரி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## மகளிர் மேம்பாட்டு மன்றம்

08.03.2018 அன்று மகளிர் தின விழா நடைபெற்றது. விழாவின் பொருட்டு ஆசிரியர்களும் மாணவிகளுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்றன. அதில் சென்னை, எழுத்தாளர் திருமதி சாலின் மனோஜ் குமார், தஞ்சாவூர், இன்னர் வீல் கிளாப்பின் தலைவர் திருமதி வீ.உஷாநந்தினி, தஞ்சாவூர் மகப்பேறு மருத்துவர் திருமதி வீ.தென்றல் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.



28.06.18 அன்று சட்டக் கல்வி அறிவு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் தஞ்சாவூர் மாவட்டச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் நீதிபதி திருமதி இரா. சாந்தி அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்டங்கள் குறித்து சொற்பொழிவாற்றினார். இதில் அனைத்துத் துறை மூன்றாம் ஆண்டு மாணவிகள் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு மன்றமும் தஞ்சை சமூக நலச்சங்கமும் இணைந்து ‘மகளிர் விழிப்புணர்வு’ குறித்த ஒருநாள் கருத்தரங்கத்தினை 06.02.2019 அன்று கல்லூரி வளாகத்தில் நடத்தியது. இக்கருத்தரங்கத்திற்கு கல்லூரி முதல்வர் முனைவர் தே.மலர்விழி அவர்கள் தலைமை தாங்கினார்.



இக்கருத்தரங்கில் திருவாரூர் திரு.வி.க. கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் கோ.கீதா அவர்கள் ”21-ஆம் நூற்றாண்டில் பெண்களின் நிலை” எனும் பொருண்மையில் உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து தஞ்சை குந்தவை நாச்சியார் அரசுக் கலைக் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பு.இந்திராகாந்தி அவர்கள் 'தமிழ் இலக்கியங்கள் காட்டும் பெண்கள்' எனும் பொருண்மையில் உரையாற்றினார். முன்னதாக மகளிர் மேம்பாட்டு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த் துறைத்தலைவருமான முனைவர் கு.ர.சரளா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மேலும் தஞ்சாவூர் சமூக நலச்சங்கத்தின் செயலாளரும், வரலாற்றுத் துறையின் உதவிப்பேராசிரியர் முனைவர் கோ.ஜெகதீஸ்வரி அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியினை தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ப.ராஜராஜேஸ்வரி அவர்கள் தொகுத்து வழங்கினார். இக்கருத்தரங்கில் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் தமிழ்த்துறை, வரலாற்றுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த மாணவிகள் பங்குபெற்று பயன்பெற்றனர்.



பெண்கள் கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கம்

கருத்தரங்கில் பேசுகிறார் கல்லூரி முதல்வர் தே.மலர்விழி

ஒரத்தநாடு, பிப். 7: ஒரத்தநாடு பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புப் பெண்கள் கல்லூரியில் தஞ்சை சமூக நலச் சங்கம், கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு மன்றம் சார்பில் மகளிர் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கத்திற்கு கல்லூரி முதல்வர் தே. மலர்விழி தலைமை வகித்தார்.

திருவாரூர் திரு.வி.க. கலைக் கல்லூரியின் முதல்வர் கோ. கீதா பேசும்போது 19, 20, 21 ஆம் நூற்றாண்டுகளில் பெண்களின் பல்வேறு நிலை குறித்து விரித்துரைத்தார். 19 ஆம் நூற்றாண்டில், பெண்களின் நிலை சமூக, பொருளாதார, கல்வி மேம்பாடு இல்லாத சூழலில் ஆணைச் சார்ந்திருந்தது. 20 ஆம் நூற்றாண்டு பெண் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது; 21 ஆம் நூற்றாண்டு பெண் என்பவள் எல்லா நிலைகளிலும், துறைகளிலும் முன்னேறி ஆணைவிட ஒருபடி நிலையில் உயர்ந்து விளங்குகிறாள் என்று பல்வேறு உதாரணங்களுடன் பேசினார்.

தஞ்சை குந்தவை நாச்சியார் அரசுக் கலைக் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் பு. இந்திராகாந்தி 'தமிழ் இலக்கியங்கள் காட்டும் பெண்கள்' எனும் பொருண்மையில் உரையாற்றினார். முன்னதாக, மகளிர் மேம்பாட்டு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த் துறைத் தலைவருமான கு.ர.சரளா வரவேற்றார். தஞ்சாவூர் சமூக நலச் சங்கத்தின் செயலாளரும், வரலாற்றுத் துறையின் உதவிப் பேராசிரியருமான கோ.ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியை தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் ப.ராஜராஜேஸ்வரி தொகுத்து வழங்கினார். இக்கருத்தரங்கில் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் தமிழ்த் துறை, வரலாற்றுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த மாணவிகள் கலந்துகொண்டனர்.



ஒரத்தநாடு பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி
மகளிர் மேம்பாட்டு மன்றம்
&
தஞ்சாவூர் சமூக நலச் சங்கம்
இணைந்து நடத்தும்

மகளிர் விழிப்புணர்வு கருத்தரங்கம்

நாள் : 06.02.2019 நேரம் : காலை 10 மணி
இடம் : கல்லூரி வளாகம்

-: நிகழ்ச்சி நிரல் :-

| | |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து : | |
| வரவேற்புரை : | முனைவர் கு.ர.சரளா அவர்கள்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,<br>பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி,<br>ஒரத்தநாடு. |
| தலைமையுரை : | முனைவர் தே.மலர்விழி அவர்கள்<br>முதல்வர்,<br>பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி,<br>ஒரத்தநாடு. |
| சொற்பொழிவாளர்கள் : | முனைவர் கோ.கீதா அவர்கள்<br>முதல்வர்,<br>திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர்.<br>பொருண்மை : 21-ம் நூற்றாண்டில் பெண்களின் நிலை |
| | முனைவர் பு.இந்திராகாந்தி அவர்கள்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,<br>குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),<br>தஞ்சாவூர்.<br>பொருண்மை : தமிழ் இலக்கியங்கள் காட்டும் பெண்கள் |
| நன்றியுரை : | முனைவர் கோ.ஜெகதீஸ்வரி அவர்கள்<br>உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை & செயலாளர்,<br>சமூக நலச்சங்கம்,<br>தஞ்சாவூர். |
| இணைப்புரை : | முனைவர் ப.ராஜராஜேஸ்வரி அவர்கள்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,<br>பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி,<br>ஒரத்தநாடு. |
| நாட்டுப்பண் : | |

அனைவரும் வருக

## பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு மையம்

கல்லூரி மாணவிகள் அனைவருக்கும் ஐந்து நாட்கள் பயிற்சி 10.09.18 முதல் 14.09.18 ஒன்று நடத்தப்பட்டு சிறப்பு விருந்தினர்கள் Mr.JC.ஞானசீலன், Mr.JC.ஜேம்ஸ் பெனிட்க் செபஸ்டியன், Mr.JC.சந்திரசேகர், Mr.JC.ரிச்சர்ட்ராஜ், Mr.JC.ராபர்ட்கென்னடி, Brt.திருமுருகன், Mr.JC.காந்திலெனின், Mr.JC.கருணாகரன், ஆகியோர் மென்திறன் அபிவிருத்தி, யோகா, நேர்காணல் தொடர்பான சுய பாதுகாப்பு முறைகள், தார்மீக மதிப்புகள், தன்னம்பிக்கை, விழிப்புணர்வு திட்டம் போன்றவை எடுத்துரைக்கப்பட்டது.

கல்லூரி மாணவிகள் அனைவருக்கும் “Soft Skill Programme” Mrs.ஷாமிம் அவர்களை சிறப்பு விருந்தினராக அழைத்து 08.10.18 முதல் 11.10.18 வரை நடத்தப்பட்டது.

“Workshop On Confidence Programme” என்ற பட்டறை கல்லூரி மாணவிகள் அனைவருக்கும் 05.02.19 முதல் 06.02.19 வரை நடத்தப்பட்டது. இதில் நேர்காணல், தன்னம்பிக்கை, உள்நோக்கம், போன்றவற்றை Mr.R.கார்த்தி, Mrs.A.சுதா B.E.,M.S(U.K), கல்வி பயிற்றுநர், ஹிந்துஸ்தான் யூனிலீவர் மும்பை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.



2018-2019 ஆம் ஆண்டிற்கான “வாழ்க்கை வழிகாட்டி” நிகழ்ச்சியை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் துறை, முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் 26.02.2019 அன்று நடத்தப்பட்டது.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

2017-18 ஆம் கல்வியாண்டு முதல் பெற்றோர் ஆசிரியர் கழகம் கல்லூரியில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது என்பதை அகமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கழகத்தின் மூலம் மாணவிகள் பயன்பெறும் வகையில் விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கல்விச் சுற்றுலா

சமூகப்பணித் துறையின் இளங்கலை இரண்டாமாண்டு மாணவிகள் திருச்சி பச்சமலையில் உள்ள பழங்குடியின மக்களைப் பற்றி அறிந்துகொள்ளும் பொருட்டு கல்விச் சுற்றுலா சென்றனர்.







கணிணி அறிவியல் மற்றும் கணிணி பயன்பாட்டியல் துறையின் மாணவியர்கள் மூன்று நாட்கள் 10.10.18 to 12.10.18 ஊட்டி, மைசூர் தொழிற்துறை சுற்றுலா சென்று வந்துள்ளனர். அவர்கள் அனிபிரேம் நிறுவனம், மைசூர் பேலஸ், சாமூண்டீஸ்வரி கோவில், பிருந்தாவன் கார்டன், மைசூர் இரவு விளக்கு. மைசூர் சர்ச், ஆஞ்சநேயா கோவில், முதுமலை காடு. ஊட்டியில் படகு, குதிரை சவாரி, பைகாரா அருவி, மெழுகு அருங்காட்சியகம், தேயிலை தொழிற்சாலை, தொட்ட பேட்டா, தாவரவியல் பூங்கா, பைன் மரங்கள் ஆகியவற்றைக் கண்டு களித்தனர்.

## இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகள்

09.09.2017 அன்று இளைஞர்களுக்கான பன்னாட்டுக் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு மாணவி வெ. அபிநயா திருக்குறள் வாழ்வியல் நெறிமுறை எனும் பொருண்மையில் ”குறள் கூறும் அற நெறிகள்” எனும் தலைப்பில் கட்டுரை வாசித்து சான்றிதழ் பெற்றுள்ளார்.

26.01.18. அன்று 69 வது குடியரசு தின விழா முன்னிட்டு நாமக்கல் மாவட்டம் பரமத்தி எனும் ஊரில் துறை மாணவிகள் பத்து பேர் கலந்து கொண்டார்கள். அதில் வெ. அபிநயா அவர்கள் ஓவியத்திற்கான போட்டியில் ஓவியச் சிகர விருதினையும், கவிதைப் போட்டிக்கான கவிமணி விருதுனையும் கட்டுரைப் போட்டிக்கான இலக்கிய அருவி விருதினையும் பெற்று வந்தள்ளார். மற்ற மாணவிகளும் பரிசுகள் பெற்று வந்துள்ளனர்.

03.10.2018 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாலின சமத்துவம் எனும் பெண்கள் நலன் காக்கும் (Traninag of Trainer (Tot) for Gender champion Club) எனும் அமைப்பு பயிற்சி பட்டறை ஒன்று நடத்தியது. அதில் தமிழ் இலக்கிய மாணவிகள் வி. அபிநயா, வி. ஜெயந்தி, மு. அனுசியா, எம். அனு ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களைப் பெற்று வந்துள்ளனர்.

30.01.2019 தஞ்சாவூர் அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் திருக்குறள் பேரவை சார்பில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்றது. அதில் வி.அபிநயா, எம் அனுசியா ஆகிய மாணவிகள் கலந்து கொண்டு சுற்று சூழல் பாதுகாப்போம் எனும் தலைப்பில் கட்டுரை போட்டியில் கலந்து கொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று வந்துள்ளனர்.

தமிழ் நாடு கலை இலக்கிய மன்றம் (கொட்டாரம்) எனும் அமைப்பு கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கலைப் போட்டிகளை நடத்தியது. அதில் முப்பத்தைந்து மாணவிகள் கலந்து கொண்டுள்ளனர்.

22.02.2019 அன்று பொது நல அமைப்பு மற்றும் வேளாளர் மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்தியது. இதில் தமிழ்த்துறை மாணவிகள் தமிழ் மொழி காப்போம் எனும் பொருண்மையில் மு. அனுசுயா, வெ. அபிநயா, வி. ஜெயந்தி, ஆ.திவ்யா, மு.அனு ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## விளையாட்டுப் போட்டிகளில் பங்கு/வெற்றி பெற்ற மாணவிகள்

2018-2019 ஆண்டிற்கான பல்கலைக்கழக அளவிலான கபாடி போட்டி அன்னை கல்லூரி, கும்பகோணத்தில் அக்டோபர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில் எமது கல்லூரி மாணவிகள் பங்கு பெற்றனர்.

2018-2019 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் 02.02.2019 முதல் 05.02.2019 வரை தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் எம் கல்லூரி மாணவிகள் பங்கு பெற்று ந.புவனேஸ்வரி B.Com மூன்றாம் ஆண்டு ஈட்டி எரிதலில் மூன்றாம் பரிசும், இயற்பியல் துறை மாணவி க. ஹரிணி மற்றும் Biotech மாணவி ம.மனிஷா ஆகியோர் கபாடி போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு ரூ1000/- பரிசு பெற்றனர்.




தஞ்சாவூர் மாவட்டத்தில் கடற்கரை கபடி போட்டி 24.10.2018 அன்று புதுப்பட்டிணம் வெளி வயல் கிராமத்தில் நடைபெற்றது. இதில் எம் கல்லூரி மாணவி உயிர் தொழில்நுட்பவியல் ம.மனிஷா முதல் இடம் பெற்று ரூ.500/- பரிசு பெற்றார். மேலும் மாநில அளவிலான கடற்கரை கபாடி போட்டி ராமநாதபுரத்தில் 13.01.2019 &14.01.2019 ஆகிய தேதிகள் நடைபெற்றது. இதில் எம் கல்லூரி உயிர் தொழில்நுட்பவியல் மாணவி ம.மனிஷா மூன்றாம் இடம் மற்றும் ரூ1000/- பெற்றார்.






இந்திய அரசு நேரு யுவ கேந்திரா, தஞ்சாவூர் & சமூக நலச் சங்கம்



(SHE) தஞ்சாவூர் மற்றும் பாரதிதாசன் பவ்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, ஒரத்தநாடு இணைந்து நடத்திய வட்டார அளவிலான சர்வதேச மகளிர் தின சிறப்பு விளையாட்டு விழா 22.02.2019 மற்றும் 23.02.2019 நடைப்பெற்றது. இதில் கபாடி, கோ கோ, கைப்பந்து மற்றும் 100 மீட்டர், 200






மீட்டர் ஓட்ட பந்தயம் நடைபெற்றது. இதில் நம் கல்லூரி மாணவிகள் அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.




2018-2019 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான கபாடி போட்டி 23.02.2019 முதல் 25.02.2019 ஆகிய 3 நாட்கள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோங் கோட்டில் உள்ள K.S.R. Engineering College–ல் நடைபெற்றது. இதல் எம் கல்லூரி மாணவி ம.மனிஷா பங்கு பெற்று முதல் சுற்றில் வெற்றி பெற்றார்.

66-வது தமிழ்நாடு மாநில மூத்த கபாடி சாம்பியன்ஷிப் -2019, 19-01-2019 & 26.02.2019 அன்று நாமக்கலில் நடைபெற்றது. இதில் எம் கல்லூரி மாணவி


SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMILNADU
THANJAVUR DISTRICT UNIT
CHIEF MINISTER'S TROPHY
DISTRICT LEVEL SPORTS AND GAMES 2018-2019
MERIT CERTIFICATE

Name : M. Manisha
School / Institution / Club :
Game / Event : Kabaddi
Position : Winner

Venue : Annai Sathya Stadium, Thanjavur
K. Babu
District Sports & Youth Welfare Officer, Thanjavur

ம.மனிஷா பங்கு பெற்றார். 14 வது ஈசா கிராமோசவம் கபாடிபோட்டி திருச்சியில் நடைபெற்றது. இதில் எம் கல்லூரி மாணவி ம.மனிஷா உயிர் தொழில்நுட்பவியல் இரண்டாமாண்டு மாணவி முதலிடம் பெற்றார்.

## துறைகளின் செயல்பாடுகள்

## தமிழ்த் துறை



29.06.2018 அன்று நம் தமிழ்த்துறையில் இளங்கலை, மற்றும் முதுகலை, முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான வரவேற்பு விழா நடை பெற்றது. அவ்விழாவில் நம் கல்லூரி முதல்வர் தலைமை ஏற்று மாணவிகளின் திறமைகளை வெளிப்படுத்துவற்கான சிந்தனைகைளையும், ஊக்கத்தினையும், வலியுறுத்தும் வகையில் உரையாற்றி மாணவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார். எல்லாத் துறைத்தலைவர்களின் வாழ்த்துகளுடன் பிற துறை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் தமிழ்த்துறையில் சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையிலான ஆய்வுத்திட்டத்தின் கீழ் ‘சங்க இலக்கியத்தில் அளபெடைச் சொற்கள்’ என்னும் பொருண்மையில் 16.07.2018 திங்களன்று ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழ்த்துறை உதவிப்பேராசிரியரும் ஒருங்கிணைப்பாளருமான முனைவர் தே.வீ.சுமதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தொடக்கவிழாப் பேருரை நிகழ்த்தினார் முனைவர் ச.திருஞானசம்பந்தம். தஞ்சை சரபோசி கல்லூரியின் தமிழ்த்துறை

| 5 | Mrs.S.Ramya | Cotemporary Developments In Applied Mathematics | National | Auxilium College of Arts and Science for Women Pudukkottai | Sept 14 & 15 2018 |
| 6. | Mrs.B.Brundha | Cotemporary Developments In Applied Mathematics | National | Auxilium College of Arts and Science for Women Pudukkottai | Sept 14 & 15 2018 |
| 7 | Mrs.M.Gayathri | Cotemporary Developments In Applied Mathematics | National | Auxilium College of Arts and Science for Women Pudukkottai | Sept 14 & 15 2018 |

| | COMPUTER SCIENCE | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | S.Roja | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 2. | V.Elamurugu | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 3. | P.Kodimalar | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 4. | B.sasikala | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 5. | K.Selvi | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 6. | G.Sathya | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 7. | T.Thirumagal | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 8. | M.Lakshmi | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |
| 9. | S.Amutha | Advanced Learning Technologies | Inter-national | Bon Secours College For Women | 12.02.19 |

| | SOCIAL WORK | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Dr. A. Sivagami | Revised NAAC Norms and Procedures | National | Association of Principals of Colleges of Bharathiyar University<br><br>Bharathiyar University<br><br>Coimbatore | 26-27 Oct 2018 |

## ACADEMIC CONTRIBUTIONS FROM STUDENTS

### Paper Presentations

| Sl. No. | Name of the Student(Dept.) | Title of the Paper/Poster | Level (State/ National /Inter-national) | Sponsoring Agency and Name of the Institution | Date |
|---|---|---|---|---|---|
| | ENGLISH | | | | |
| 1. | C. Suganya, Ph. D Scholar | Insecure Feeling in the Novel The White Tigerby Aravind Adiga | Inter-national | AVVM Sri Pushpam College, Poondi | 11.02.2018 |
| 2 | A.Aarthi Ph.D Scholar | Black Feminism in Alice Walker's "The Colour Purpule" | Inter-national | AVVM Sri Pushpam College, Poondi | 11.02.2018 |
| 3 | R. Deepa-dharshini Ph.D Scholar | Post Colonial Reality and Its predilection in V.S. Naipaul's "The Mystic Masseur" | Inter-national | AVVM Sri Pushpam College, Poondi | 11.02.2018 |
| 4 | R. Deepa-dharshini Ph.D Scholar | The Immigrant Experience of Displacement, Exile and homelessness in V. S. Naipaul's "A House for Mr. Biswas" | Two day National | Davangere University, Karnataka | 19.11.2018 |

# Participation in Seminar and Conferences

| S.N | Name of the student &Department | Title of the Seminars/ Conferences, Symposia, Workshops | Level (State/ National/ Inter-national) | Sponsoring Agency and Name of the Institution | Date |
|---|---|---|---|---|---|
| | **BIO CHEMISTRY** | | | | |
| 1 | Fifteen students Biochemistry | Popular Lectures on Biotechnology | National | Department of Biotechnology Ministry of Science and Technology New Delhi<br>PG and Research Department of Zoology Rajah Serfoji Govt. College (Auto)Thanjavur | 18.7.2018 |
| | **ENGLISH** | | | | |
| 1 | C. Suganya, Ph. D Scholar | English Language and Literature | Inter-national | AVVM Sri Pushpam College, Poondi | 11.02.2019 |
| 2 | S. Subalakshmi Ph. D Scholar | Target NET/SET | State | Thiru Vi. Ka. Govt. Arts College, Thiruvarur | 16.02.2019 |
| 3 | A. Aarthi, Ph.D scholar | Target NET/SET | State | Thiru Vi. Ka. Govt. Arts College, Thiruvarur | 16.02.2019 |
| 4 | R. Deepa-dharshini Ph. D Scholar | Target NET/SET | State | Thiru Vi. Ka. Govt. Arts College, Thiruvarur | 16.02.2019 |
| 5 | S. Subalakshmi Ph. D Scholar | Revisiting and Reconstructing the past – Post Colonial voices in Literature | National | Bonsecours College for Women, Thanjavur | 10.03.2018 |
| 6 | A. Aarthi Ph. D Scholar | Revisiting and Reconstructing the past – Post Colonial voices in Literature | National | Bonsecours College for Women, Thanjavur | 10.03.2018 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | R. Deepa-dharshini<br>Ph. D Scholar | Revisiting and Reconstructing the past – Post Colonial voices in Literature | National | Bonsecours College for Women, Thanjavur | 10.03.2018 |
| | **BBA** | | | | |
| 1 | Suganya.K-<br>II BBA | Suicide Prevention Awareness Campaign (II Place in Drawing Competition) | District | District Mental Health Programme, Thanjavur | September 2018 |
| 2 | Atchaya.S-<br>Kaviya.M<br>Saranya.P<br>III BBA | 6-Day Campus Axil – StartUp Accelerator Programme | State | PMO-IECD (Programme Monitoring Office-Innovation & Entrepreneurship Programme),and BIT- Anna University,Trichy | 22.09.2018 to 24.09.2018 &27.09.2018 to 29.09.2018 (6 Days) |
| 3 | Atchaya.S<br>Priyatharshini.N<br>II BBA | Intercollegiate Management Symposium GESCHAFT-2k18 | State | Khadir Mohideen College, Adirampattinam | 12.08.2018 |
| | **Social work** | | | | |
| 1 | Sindhiya<br>III BSW | Issuses and challenges in global society | Inter-national | Tamil university Thanjavur | 27.03.2018 |
| 2 | Vindya shri<br>III BSW | Issues and challenges in global society | Inter-national | Tamil university Thanjavur | 27.03.2018 |
| 3 | Neevethini<br>III BSW | Issues and challenges in Global society | Inter-national | Tamil university Thanjavur | 27.03.2018 |
| 4 | Madhumita<br>III BSW | Issues and challenges in global society | Inter-national | Tamil university Thanjavur | 27.03.2018 |
| 5 | Elizbethrani<br>III BSW | Issues and challenges in global society | Inter-national | Tamil university Thanjavur | 27.03.2018 |
| 6 | W. Catherine Jeneffer<br>III BSW | Workshop on Short film making | National | Bishop Heber College, Tiruchirappalli | 31.07.2018 |
| 7 | S. Podhilakshmi<br>III BSW | Workshop on Short film making | National | Bishop Heber College, Tiruchirappalli | 31.07.2018 |
| 8 | S. Sathyapriya<br>III BSW | Workshop on Short film making | National | Bishop Heber College, Tiruchirappalli | 31.07.2018 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | P. Praveena<br>III BSW | Workshop on Short film making | National | Bishop Heber College, Tiruchirappalli | 31.07.2018 |
| 10 | S. Priyanka<br>III BSW | Workshop on Short film making | National | Bishop Heber College, Tiruchirappalli | 31.07.2018 |

## Faculty Development Programme

| S.No. | Name of the staff(s) | Title of the Programmes | Organization | Month & Year |
|---|---|---|---|---|
| 1. | Dr.R.Mangalanayaki | UGC – Sponsord short Term Course in Gender Senitization | UGC & HRDC of Bharathidasan University, Thiruchirappalli - 23 | 21.03.2018 – 27.03.2018 |
| 2. | Dr.S.Jeyasheela | Capacity Building of Women Managers in Higher Education | Dept. of women studies, Bharathidasan University, Thiruchirappalli - 23 | 07.05.2018-13.05.2018 |
| 3. | Dr.S.Maneemegalai | MOOC Co Massive open online course(MOOC) on Dynamic of Teaching and Learning urse | ICAR National Academy of Agricultural Research Management Hyderabad | November 1-30 2018 |
| 4. | Dr.A. Sivagami | MOOC Co Massive open online course(MOOC) on Dynamic of Teaching and Learning urse | ICAR National Academy of Agricultural Research Management Hyderabad | November 1-30 2018 |

# மாணவியர் கைவண்ணம்

### வாழ்க்கை

தவிர்க்க முடியாமல் சில
இழப்புகள்
நம்ப முடியாமல் சில
உண்மைகள்
வெளிப்படுத்த முடியாமல் சில
துன்பங்கள்
அனுபவிக்க முடியாத சில
சந்தோஷங்கள்
இதுதான் வாழ்க்கை

### உறவு

யோசித்து வாழ ஆயிரம்
உறவுகள் இருந்தாலும்
நேசித்து வாழ ஒரு உயிர்
போதும் உன்னைப் போல

### தன்னம்பிக்கை

நீ விழும்போதெல்லாம்
தாங்கிப் பிடிக்கும் இந்தக்கை
மனம் உடையும் போதெல்லாம்
தட்டிக்கொடுக்கும் இந்தக்கை
ஏணியே நீ அழும்போதெல்லாம் உன்
கண்ணீரை துடைக்கும் இந்தக்கை
அதுவேறு யாரு கையுமல்ல
அது உன்னுள் உள்ள உனது
தன்னம்பிக்கை
அதை மட்டும் ஒருபோதும்
இழந்துவிடாதே........

### நட்பு

கண்ணாடி என் நண்பன் ஏனென்றால்
நான் அழும்போது அது
சிரிப்பதில்லை
கனவுகள் எல்லாம் நனவாகும்
நிறைய காயங்களுக்குப் பிறகு
உன்மனம் வலிக்கும்போது சிரி
பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை
உன்வேதனை பலரை சிரிக்க வைக்கலாம்
ஆனால்
உன் சிரிப்பு யாரையும்
வேதனைப்படுத்தக் கூடாது



**செல்வி.ஜி.ரெத்தினம்**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

### தனிமையின் சுகம்

கனவுகள் கோடி இருக்கிறது,
அனைத்தும் கனவிலே இருக்கிறது ! ஏனெனில்
கனவிலிருந்து எழுப்பி கனவைக்
கேட்க ஆள் இல்லை எனக்கு !

தனிமையே என்னை எழுப்பிக் கேட்டது.
அதனிடமே என் கனவைச் சொன்னேன்.

தாய், தந்தை சொல்ல மறந்ததை
உடன்பிறந்தோர் சொல்ல மறந்ததை
நட்புறவுகள் சொல்ல மறந்ததை

தனிமையே எனக்கு சொன்னது
இப்பொழுதெல்லாம் நான் அதிகம் சந்திக்கும்
நண்பன் தனிமையே !
நம்மைப் பற்றி நண்பனிடம் தானே கேட்கவேண்டும்
என் நண்பனிடம் கேட்டேன், நான் எப்படிப்பட்டவன்
என்று
அதற்கு அவன் சொன்னான்
"இயந்திர உலகை மறந்து
இன்ப துன்பங்களையெல்லாம் மறந்து
இயற்கை காற்றை சுவாசித்து
இயற்கை அழகை ரசித்து, மன அமைதியோடு
தனிமையில் உட்கார்ந்து பார்
நீ யாரென்று உனக்கே புரியும்" என்று
அன்று புரிந்துகொண்டேன்
நான் யாரென்று மட்டுமல்ல
தனிமையின் சுகம் பற்றியும், வலிமை பற்றியும்



**செல்வி. செ. வெற்றிச்செல்வி**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை கணிதவியல்

### யாரிடம் கற்பது ?

| | | |
|---|---|---|
| விடா முயற்சி | : | கடல் அலையிடம் |
| கடமை தவறாமை | : | கதிரவனிடம் |
| உத்வேகம் | : | காட்டாற்றிடம் |
| புன்னகை | : | பூக்களிடம் |
| சுறுசுறுப்பு | : | எறும்புகளிடம் |
| சேமிப்பு | : | தேனீக்களிடம் |
| பொறுமை | : | பூமியிடம் |
| கருணை | : | கடவுளிடம் |



**செல்வி. வி. மதுமிதா**
முதலாம் ஆண்டு
முதுகலை சமூகப்பணி

## இராணுவ வீரன்

எல்லையிலே காத்துக்கிடந்து
இரவு பகல் விழித்திருந்து
தொல்லைகள் பல பொறுத்திருந்து
நம்மைக் காக்கும் ராணுவ வீரன்.
உயிரை அவர்கள் துச்சமாய் நினைத்து
உணவு உறக்கம் எல்லாம் மறந்து
காடுகள் மலைகள் எல்லாம் கடந்து
காப்பாற்றுகின்றனா் இந்திய எல்லையை...
கொட்டும் மழையிலும்
இந்திய மண்ணிண் மானம் காத்து
எல்லையிலே வாழ்வைக் கழித்து
கண்ணி வெடிகளும் காலில் படலாம்
துப்பாக்கி குண்டுகள் உடலை வளைக்கும்
உடல் ஊனமாகும் சிலநேரங்களில்
உயிர்கள் சாதரணமாய் போகும்
சுயநலம் கொண்ட மனிதபூமியில்
பொதுநல தியாகிகள் அவர்களை மதிப்போம்.....
ஜெய்--ந்த் !



**செல்வி. சி. அபிநயா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை வணிகமேலாண்மை

## தாய்மொழி

மொழிகளற்ற மழையாய் பேதை
போல் நான் இருக்க நீ பேதை
அல்ல மகளே ! மேதை என்று உணர்த்த
கருவியாக மாறிய தமிழே
என் தாய்மொழி தாய்
மட்டுமல்ல தாய்மொழியும்
கலப்படமற்றதே என்று உணர்த்தியமொழி
என் தாய்மொழி தமிழ்மொழியே !
தமிழ் என்பது மொழியல்ல
ஒரு உலக சரித்திரம்
தமிழ் என்பது உணர்வல்ல
ஒரு மண்ணின் உரிமை
தமிழ் என்பது பேச்சல்ல
ஒரு இலக்கிய வாழ்விடம்
தமிழ் என்பது எழுத்துக்கலையல்ல
ஒரு இலக்கண கருவின் பிறப்பிடம்
தமிழ் என்பது பெருமையல்ல
ஒரு அடையாளம்.



**செல்வி. எஸ். சிவபிரியா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர் தொழில்நுட்பவியல்

## பெண்குழந்தை

பெற்றோர்களுக்கு பிறந்தது ஒரு பெண்குழந்தை
கள்ளிப்பால் கொடுத்து கொன்றுவிடு
இல்லையென்றால் சென்றுவிடு என்றான் கணவன்

மறுக்க மனமின்றி கொன்றால் குழந்தையை
புதைத்த இடத்தில் தட்டாய் ஒரு வேப்பங்கன்று
ஆசைஆசையாய் பிறந்தது ஒரு ஆண்குழந்தை

ஆண்குழந்தை வளர ! வளர !
வேப்பங்கன்றும் வளா்ந்தது....
ஒருநாள் மழைபெய்யும் நேரம்
ஆண்குழந்தை பெற்றோர்களை வெளியே தள்ள
குடையாய் இருந்தது வேப்பமரம்.

"இருந்தும் உதவவில்லை ஆண்குழந்தை
இறந்தும் உதவியது பெண்குழந்தை"



**செல்வி. பொ. பிரித்திகா**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## இராணுவ வீரா்கள்

குடும்பத்தையும் மறந்து தன் உயிரையும் துறந்து
நாட்டிற்கான உன் உயிரையே அா்ப்பணித்தாயே !
வீரரே நான் உன் நாட்டுப்பற்றைக் கண்டு
வியக்கிறேன்

குழந்தை பாசத்தையும் மிஞ்சி நாட்டை நேசித்து
உன் உயிரையே அா்ப்பணித்தாயே !
வீரரே நான் உன் வீரத்தைக் கண்டு மயங்குகிறேன்
பாதுகாப்புடன் நான் உறங்க
இரவு பகலும் நீ கண்விழித்தாயே !

வீரரே எந்தவகை கைமாறும் உனக்குப் போதாது.
நீ இந்த மண்ணிற்கென சிந்தும் ஒவ்வொரு துளி
இரத்தமும்
நுாறாயிரம் ஆண்டுகளுக்கு முரசுரையும்,
வீரரே நீ கொல்லப்படவில்லையடா ! வீரமரணம்
அடைந்தாய் !
எத்தனை இரவுகள் கண்விழித்துக் காத்தாய் !
இனிவரும் நாட்கள் கண்மூடி உறங்கடா ! வீரனே !



**செல்வி. எஸ். சிவபிரியா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர் தொழில்நுட்பவியல்

## பொன்மொழிகள்

விலை கொடுத்து ஒரு புத்தகத்தை வாங்குவதன் மூலம் விலை
மதிக்கமுடியாத செல்வத்தை வீட்டுக்கு கொண்டு செல்கிறீர்கள்
புத்தகம் என்பத உங்கள் வீட்டின் வாடாத பூங்காவனம்
புத்தகங்களுக்குச் செலவிடுகிற தொகை செலவல்ல - மூலதனம்
வாங்கும் புத்தகம் வாழ்வின் பெட்டகம்
எழுத்து விதைகளில் செழித்து வளர்வது தனிமனிதரல்ல - சமுதாயம்
உயிர்வாழ சுவாசிக்க வேண்டும். உயர்வடைய வாசிக்கவேண்டும்.
புத்தகங்கள் நல்வழிகாட்டிகள்
ஒரு நூல்நிலையக் கதவு திறக்கப்படும்போது நூறு சிறைக்கதவுகள் மூடப்படுகின்றன
அறிவின் வெளிச்சத்தைச் சுமந்துவரும் வாகனங்கள் புத்தகங்கள்
புத்தகங்கள் மனித சமுதாயத்தின் அழியாச் சொத்து
புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே !
மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்



**செல்வி. எஸ். சிவபிரியா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர் தொழில்நுட்பவியல்

## அறிஞர் பொன்மொழிகள்

**சுவாமி விவேகானந்தர்**
நீ பட்ட துன்பத்தை விட அதில்
நீ பெற்ற அனுபவமே சிறந்தது
உன்னால் சாதிக்க இயலாத காரியமென்று
எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே
**அன்னை தெரசா**
வெறுப்பது யாராக இருந்தாலும்
நேசிப்பது நீயாக இரு
உன்மேல் அன்பு செலுத்துபவர்களை
நேசி - உன்மீது கோபம்
கொள்பவர்களை அதைவிட நேசி.
அத்தனை சுருக்கம் இருப்பினும்
அன்பால் ஆன அன்னை தெரசாவின்
முகஅழகு வேறு எந்த பெண்ணிடமும் இல்லை.



**செல்வி. எஸ். சத்யபிரியா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## வேளாண்மை

வேளாண்மை நமது நாட்டின் முதுகெலும்பு. வேள் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த வேளாண்மை என்னும் சொல் பொதுவாக கொடை, ஈகை என்னும் பொருளைக் குறிக்கும், வேளாண் என்பதற்கு வெள்ளத்தை (நீரை) ஆள்பவன் என்றும் வேளாண்மை என்ற சொல் “விருப்பத்துடன் பிறரைப் பேணுதல்” என்ற பொருளையும் குறிக்கும்.

“வாழ்க்கை“ என்னும் வயலில் மனிதன் என்னும் ”விவசாயி” தன்னுடைய உழைப்பு, முழு ஈடுபாடு, சோர்வின்மை என்னும் விதைகளை தூவி அதில் ”முயற்சி” என்னும் நீரை தொடர்ந்து ஊற்றினால் தான் வாழ்க்கை என்னும் அவ்வயலில் குறிக்கோள் என்னும் அறுவடையை அவன் அடையமுடியும்.

நம் முன்னோர்கள் நமக்கு விவசாயத்தையும், மரங்களையும் விட்டுச் சென்றார்கள். நாம் நம் தலைமுறையினருக்கு எதை விட்டுச் செல்லப் போகிறோம் ???



**செல்வி. ச. கார்த்திகா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை வணிக மேலாண்மை

## அம்மா

நெஞ்சை நெகிழும்
நெடுந்துயர் அடைந்த அம்மா
பாடுபட்டு உழைத்து வந்த என்
பசியினை நீ போக்கி !
ஈரத்துணியை வயிற்றில் கட்டி
இன்னுயிர் நீ துறந்து இன்னும் என்னை
சுமந்தாயே !
கல்வி நானும் பயின்றிடவே - பல
கற்பனையை வளர்த்தாயே
இனிமை நிலா சோறூற்றி
இனித்திடவே வைத்தாயே
இட்டபெயர் நீ நினைத்து
இவ்வுலகின் இளையநிலா என நீ நினைத்து
உறக்கத்திலும் உணர்ந்தாயே - உன்
பிள்ளை உயர்வென்று
இத்தனையும் நான் மறந்து - உன்னை
இன்னல்களில் இடறிவிட்ட பாவியடி
நான் ! அம்மா .....



**செல்வி. மோ. ஆசிகா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## குழந்தைத் தொழிலாளர்கள்

வளர்ச்சியடைந்த பல நாடுகளில் குழந்தைத் தொழிலாளர்களின் வயது மாறுபட்டதாக இருக்கிறது. இந்தியாவை பொறுத்தவரை 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகளாக கருதப்படுகிறார்கள். ஆனால் குழந்தை தொழிலாளர் சட்டப்படி 14 வயதிற்குட்பட்டவர்களே குழந்தைகளாக கருதப்படுகிறார்கள். பாலியல் தொழில், குவாரி, விவசாயம், பெற்றோர்களின் தொழிலில் உதவுதல் மற்றும் சிறிய வணிகத்தில் குழந்தை தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். குழந்தை தொழிலாளர் ஒழிப்பு (தடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) 1986 சட்டத்தின் படி 15 தொழில்கள் மற்றும் 57 செயல்முறைகளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற பல்வேறு கொடுமைகளை தடுப்பதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாய நல நிறுவனங்கள் ஆகியவை அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்.

மிகவும் சிறிய வயதில்
வேலைக்கு செல்லும்
குழந்தைத் தொழிலாளர்களை
பாதுகாப்போம் !



**செல்வி. த. ரஞ்சனி**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை வணிக மேலாண்மை

## கலாம் பாடல்

கலாம் தாத்தா, கலாம் தாத்தா
எங்கே போனீங்க . . . . !
எங்களை எல்லாம் விட்டு விட்டு
ஏன் போனீங்க
நாங்களெல்லாம் உங்களை போல
ஆக வேணுங்க
திரும்பி வந்து எங்களுக்கு
சொல்லி கொடுங்க
கலாம் தாத்தா, கலாம் தாத்தா
எங்கே போனீங்க.



**செல்வி. வீ.கீர்த்திகா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## APJ

யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே
ஆனால்
உனக்காக தன்னையே மாற்றிக் கொள்பவர்
கிடைத்தால்
அவர்களை தொலைத்துவிடாதே
நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்பும்
எப்போதும் மண்டியிடுவது இல்லை
அழகைப் பற்றி கனவு காணாதீர்கள்
அது உங்கள் கடமையை பாழாக்கி விடும்
கடமையை பற்றி கனவு காணுங்கள்
அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கிவிடும்
நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை
நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும்
உன் உழைப்பால் நீ எண்ணியது
உன்னை வந்துசேரும்
நீ நீயாக இருந்தால்
கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே
அது உன்னை வென்றுவிடும்
கண்ணைத் திறந்துபார்
நீ அதை வென்றுவிடலாம்
வாய்ப்புக்காக காத்திருக்காதே
உனக்கான
வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்
சிந்திக்க தெரிந்தவனுக்கு
ஆலோசனை தேவையில்லை



**செல்வி. எஸ். சத்யபிரியா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## அந்த மைல்கல்

| | | |
|---|---|---|
| மஞ்சள் | : | தேசிய நெடுஞ்சாலை |
| பச்சை | : | மாநில நெடுஞ்சாலை |
| நீலம்,வெள்ளை | : | மாவட்ட சாலை |
| பிங்க், கருப்பு | : | ஊரக சாலை |



**செல்வி. வி. மதுமிதா**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

# சிந்தனைத் துளிகள்

## அம்மா

வானத்தில் வசந்த நாள்
பூமியில் புகுந்த நாள்
அந்த நாள் என்பது
என் அம்மாவின் பிறந்தநாள்.
வானத்தில் ஆயிரம் நட்சத்திரங்கள்
இருந்தாலும் நான் கண்ட
முதல் நட்சத்திரம் என்
அம்மா மட்டுமே !

மண்ணில் பூத்த மலரை
மணமுள்ளவரை சுவாசி....
உன் மனத்தில் பூத்த சிலரை
உயிருள்ளவரை நேசி....
என் அம்மா என்ற புது மலரை....

தேடி தேடி போனாலும்
திரும்பப் போக முடியாத
ஒரே இடம் தாயின்
கருவறை மட்டும் தான்..

ஆருயிர் அம்மாவிற்கு அன்பு கடிதம் எழுதினேன்
உலகில் தேடிப் பார்த்தேன்
உன்னை போல் யாரும் இல்லை
அருகில் தேடிப் பார்த்தேன்
உந்தன் அன்பு யாரிடமும் இல்லை
இந்த இருள் சூழ்ந்த இரவிலே என்னைத்
தாலாட்டி உறங்க வைப்பாள்...

அன்புடன் அணைத்து முத்தமிடுவாள் அருகில்
வரச்சொல்லி அணைப்பாள்
கண்ணில் கனவு காட்டுவாள் சேலையால்
மெல்ல தொட்டிலிடுவாள்
செப்ப துளியில் என்னை சுகமாய்
தூங்க வைத்திடுவாள்

அசந்து நானும் தூங்கையிலே
மெல்ல மெல்ல போர்வை விலக்கி
முந்தானை எடுத்து முகம் துடைப்பாள்
“என் அம்மா“



**செல்வி. எஸ். சுவாதி**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## பசிக்கொடுமை

குடல்கள் கதறக் கண்கள் இருட்ட ;
செவி புடைக்க பெயர் சூட்டுவிழா
பசிக்கு.....
குடைச்சல் கொடுக்கும் குடலுக்கு ;
துவண்டு போகும் எங்கள் தோள்கள்.....
நிமிரமுடியா முதுகெலும்பால் ;
குனிந்து போகும் எங்கள் தலை !....
மிச்சம் மீதியை எச்சிலாக்கி
எரிச்சல் அடைந்து தூக்கி எறியும் சமூகம் !....
மிச்ச மீதியையும் அதிர்--டம் என நினைத்துப்
புன்னகை பூக்கும் வயிறு....
உணவைக் கொட்டும் முன்னே
சற்று சுற்றிப் பாருங்கள்
எனைப் போல் ஏராளம் உண்டு
உங்களுக்குக் கெட்டுப் போனவையே நாங்கள்
ஏற்றுக்கொள்வோம் தாராளம் என்று.
கிடைக்கிற உணவிற்கு மனம் குளிர்ந்து
நன்றி நவிலுங்கள் மறையோனுக்கு !.........



**செல்வி. மோ. அட்சயா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில் நுட்பவியல்

## என் ஆசை அப்பா

கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை எனக்கு
கடவுளே கிடைத்தார்
வரமாக என் அப்பா....
அவர் மடியில் உறங்க வரம் கிடைக்கவில்லை
ஏனென்றால் என் அப்பா நான் இந்த பூமியில்
பிறப்பதற்கு முன்பே என்னை
விட்டுச் சென்றுவிட்டார்.

**விவசாயி**

ஒரு சோற்றுப் பருக்கையின் மதிப்பு
சிதறவிட்ட நமக்குத் தெரியாது
அதை எடுத்துச் செல்லும்
எறும்புக்குத்தான் தெரியும்.

**என் முடிவு**

எந்த முடிவு எடுத்தாலும் மூளை சொல்வதை கேள்
மனதை கேட்காதே
மனதிற்கு ஆசைப்படத் தான் தெரியும்
மூளைக்குத் தான் சிந்திக்க தெரியும் !



**செல்வி. எம். தனலட்சுமி**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## விவசாயி

விவசாயி விண்ணோடு போகிறான்
விவசாயம் மண்ணோடு போகிறது !.....
உரிமைக்காக பிச்சை எடுத்தோம்
இருநூறு ஆண்டு - இனி
உணவுக்காக பிச்சை எடுப்போம்
எத்தனை ஆண்டோ ?.....
சிற்பங்கள் அழிந்தால்
கோவிலுக்கு சிறப்பில்லை....
சிற்பிகள் அழிந்துவிட்டால்
கோயிலுக்கு பிறப்பில்லை....
விவசாயி அழிந்தால
உண்ணக்கூட வழியில்லை....
விவசாயம் அழிந்தால
உயிர்வாழ வழியில்லை.....
ஏறுபோன நிலங்கள் - இன்று
கூறுபோன மனைகள்......
பருப்பு கொடுத்த சோலைகள் - இன்று
செருப்பு தொழிற்சாலைகள்
பணத்தை மட்டும் அறுவடை
பண்ண முடிந்தால் - அம்பானியும்
அரசியல்வாதியும் ஆடு மாடு
மேய்த்திருப்பான், விவசாயி
ஆகியிருப்பான் ......
ipod யையும், Android யையும்
திண்ணமுடியாது
Windows-ஐயும், Insta-வையும்
உண்ணமுடியாது......
Facebook- ஐயும், Whatsup- ஐயும்
குடிக்கமுடியாது.....
பசிக்காதது போல் பலநாட்கள்
நடிக்க முடியாது.....
விஞ்ஞான வளர்ச்சியில் வசதிகள் வரும்
வயிறு நிரம்புமா ?
விவசாயத்தை துறந்தது நாடு.....
விவசாயியை மறந்தது தேசம்.....



இப்படிக்கு
விவசாயியின் மகள்
**செல்வி. மோ. அட்சயா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில் நுட்பவியல்

## அம்மா

தேன்போன்று
இனிப்பானவள் தான் பெண்.....
அவள் மருந்தான போதிலும்.....
ஆண் ஆதிக்கம்
என்ற முகமூடியின் கீழ்....
பெண்ணின் சுதந்திரம்
ஒளிந்துகொண்டிருக்கிறது !
ஒருதுளி உதிரத்தை கூட
உருவம் செய்து
குழந்தையாய் தருபவள் பெண்......
வானவில்லாய் நீ வந்தால் வானமாக நான்
பரந்து நீ இருக்க ! மானாய் நீ வந்தால்
காடாக நான் துள்ளி குதித்து நீ ஆட !
என் விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை ரசித்திட
வெற்றியில் களித்திட
தோல்வியில் துவண்டிட
உதிரத்தை துடைத்திட
இன்பத்தை பெருக்கிட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை நீ.....
அம்மா
உன் உயிர்த்துளியாய் கருதி
மறந்திடும் நாளொன்றில்
இந்த மகளுக்கு
இவ்வுலகம் வைத்திடும்
பெயர் பிணம் !!!
தன்மானத்திற்காக எதையும்
இழக்கலாம்.....
எதற்காகவும் தன்மானத்தை
இழக்கக்கூடாது......
அன்பு அக்கறை
அரவணைப்பு, பாசம்
நேசம் தியாகம் என எல்லா
உணர்வுகளையும் ஒரே
இடத்தில் பெற முடிந்தால்
அதுதான் உண்மையாக
வாழும் கடவுள்
“அம்மா“



**செல்வி. வே. ஜெயக்கொடி**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில் நுட்பவியல்

## பொதுஅறிவு கேள்விகள்

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவ துறையில் நோபல் பரிசு வென்ற இந்தியர்கள் யார் ?<br>ரொனால்டு ராஸ் (1902), ---ர்கோபிந்த் குரானா (1968) | |
| 2. | ரேயான் இழை எதிலிருந்து எடுக்கப்படுகிறது ? | மூங்கில் |
| 3. | யுரேனியத்தை கண்டுபிடித்தவர் யார் ? | கிளாப்ராத் |
| 4. | தேனீக்களால் எந்த வண்ணத்தைப் பார்க்கமுடியாது ? | சிவப்பு |
| 5. | இந்தியாவின் வானம்பாடி என்று சிறப்பிக்கப்பட்டவர் யார் ? | சரோஜினி நாயுடு |
| 6. | தெர்மாமீட்டரை கண்டுபிடித்தவர் யார் ? | காப்ரியல் பாரன்ஹீட் |
| 7. | தியாகிகள் தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது ? | ஜனவரி 30 |
| 8. | காசிரங்கா (காண்டாமிருகம்) தேசியப்பூங்கா எங்குள்ளது ? | அசாம் |
| 9. | நன்னூல் எழுதியவர் யார் ? | பவணந்தி முனிவர் |
| 10. | மின்காந்தப் புயல் எவ்வாறு அழைக்கப்படுகிறது ? | ஆரோரா |



**செல்வி. மு. வினோதினி**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல்

## Autobiography

| | | |
|---|---|---|
| Mahatma Gandhi | : | The Story of my Experiments with Truth |
| Jawaharlal Nehru | : | An Autobiography |
| Adolf Hitler | : | Mein Kamp |
| Benazir Bhuto | : | Daughter of the East |
| Bill Clinton | : | My Life |
| Nelson Mandela | : | Long Walk of Freedom |
| Dalai Lama | : | Freedom in Exile |
| Ravindranath Tagore | : | My life in my words |
| Abdul Kalam | : | Wings of Fire |
| Kiran Bedi | : | I Dare |



**Ms. V. Mathumitha**
I MSW

## நூலகம்

கண்டதைப் படிப்பவன் பண்டிதன் ஆவான். பாடப் புத்தகத்தை தாண்டிய ஓர் உலகம் நமக்கு பல்வேறு புத்தகங்கள் தாங்கிய நூலகம் வாயிலாகக் காத்திருக்கிறது. பனையோலை, மரப்பட்டை உள்ளிட்ட பொருள்களில் பதிவு செய்யப்பட்ட செய்திகள், காகிதங்களின் கண்டுபிடிப்பால் நூல்களில் பதிவு செய்யப்பட்டன. நூலகத்தில் கதை, கவிதை, கட்டுரை போன்ற இயல்களில் நூல்கள் நிரம்பியிருக்கும். சிறுகதை, நாவல், கவிதை, கல்வி, பொருளியல், உளவியல், பொறியியல் போன்ற தலைப்புகளில் துறைசார்ந்த நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

- பாட அறிவோடு பின்தங்கி விடாமல் உலக அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.
- வாழ்வியல் நற்பண்புகளை நூல்களின் கருத்து வழியே வலுப்படுத்திக் கொள்ளலாம்
- பல்வேறு துறை சார்ந்த தகவல்களை நூல்கள் மூலம் எளிதில் பெற்றுவிடலாம்.
- ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழித்திடலாம்.
- பல்வேறு நூல்களைப் படித்துப் படைப்பாளராகவோ, பேச்சாளர்களாகவோ, மாறித் தனித்திறன்களை மெருகேற்றிக் கொள்ளலாம்.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் :
நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ் !"
எனவே நூலகங்களைத் தேடிச் சென்று
அறிவினை நாள்தோறும் வளர்த்துக் கொள்வோமாக !
தமிழ்நாட்டின் அறிவு வளர்ச்சிக்கு துணை நிற்போமாக !



**செல்வி. சே. ரேணுகா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை வணிக மேலாண்மை

## இந்திய முதல் பெண்கள்

இந்தியாவின் முதல் பெண் பிரதமர் - இந்திராகாந்தி

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் - சுசேதா கிருபளானி

இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் - சரோஜினி நாயுடு

இந்தியாவின் முதல் பெண் உச்சநீதிமன்ற நீதிபதி - பாத்திமா பீவி

இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞர் - ரெஜினா குகா

இந்தியாவின் முதல் பெண் மாநில தலைமை செயலாளர் - லட்சுமி பிரானே----

இந்தியாவின் முதல் பெண் துணைவேந்தர் - அன்னா மேத்தா

இந்தியாவின் முதல் பெண் ஓட்டுநர் - வசந்தகுமாரி

இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவர் - பிரதீபா பாட்டீல்

இந்தியாவின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை - கல்பனா சாவ்லா



**செல்வி டி. தனசெல்வி**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை நுண்ணுயிரியல்

## கொண்டாடவேண்டிய பசுமை நாட்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 4-10 | : | தேசிய பெட்ரோலிய வாரம் |
| மார்ச் 21 | : | உலக காடுகள் நாள் |
| மார்ச் 22 | : | உலக நீர் நாள் |
| ஏப்ரல் 22 | : | புவி நாள் |
| ஜீன் 3 | : | உலக சுற்றுச்சூழல் நாள் |
| ஜீலை 28 | : | இயற்கை பாதுகாப்பு நாள் |
| செப்டம்பர் 16 | : | உலக ஓசோன் நாள் |
| அக்டோபர் 16 | : | உலக உணவு நாள் |
| நவம்பர் 10 | : | அமைதி வளர்ச்சிக்கான அறிவியல் நாள் |
| டிசம்பர் 14-21 | : | எரிசக்தி சேமிப்பு வாரம் |
| டிசம்பர் 23 | : | தேசிய விவசாயிகள் நாள் |



**செல்வி. செ. தமிழ்பிரியா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை நுண்ணுயிரியல்

## வாய்மையே வெல்லும்

ஒரு ஊரில் கஞ்சன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் கஞ்சமாக செலவு செய்பவன். அவனை ஒருநாள் பாம்பு கடித்துவிட்டது. மந்திரவாதியிடம் ஓடினான் கஞ்சன். அவர் தன்னிடம் வரும்நோயாளிக்கு மந்திரம் சொல்லியே நோயைக் குணமாக்குவார்.

பூரான் கடிக்கு - 5 ரூபாய், தேள் கடிக்கு - 10 ரூபாய், பாம்புகடிக்கு - 25 ரூபாய், உனக்கு என்ன கடித்தது என்றார். கஞ்சன் எந்தக் கடியானாலும் ஒரே மந்திரத்தை தானே சொல்லப் போகிறார் அதற்கு ஏன் நாம் அதிக காசு கொடுக்கவேண்டும் என்று கஞ்சமாக யோசித்து பூரான் கடித்துவிட்டது என்றான்.

மந்திரவாதி பூரான்கடி மந்திரம் சொல்ல பயனில்லை. மீண்டும் வைத்தியரே எனக்கு தேள் கடித்துவிட்டது என்றான். மந்திரவாதி தேள்கடி மந்திரம் சொல்ல பயனில்லை.
பயந்துபோன கஞ்சன் மெதுவாக பா, பா, பாம்புகடி என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் வி----ம் தலைக்கு ஏறி இறந்துவிட்டான்.

**நீதி** : அளவுக்கு மீறின கஞ்சம் உயிரினை எடுக்கும்



**செல்வி. வே. ஜெயக்கொடி**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில் நுட்பவியல்

## ஒளி வழிபாட்டில் ஓங்கும் தத்துவம்

வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் சத்திய ஞானசபையை நிறுவியவர். “வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று பாடியவர் இவர். ‘கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக” என பாடி சங்கடம் விளைவிக்கும் சாதியையும், மதத்தையும் தவிர்த்தார். இவை யாவும் சிறுபிள்ளை விளையாட்டு என இகழ்ந்தார்.

“பெண்ணினுள் ஆணும், ஆணினுள் பெண்ணும் அண்ணுற வகுந்த அருட்பெருஞ்ஜோதி” என ஆணும், பெண்ணும் சமம் என்று உரைத்தார். மக்கள் அனைவரும், சாதி, சமயம், கோத்திரம், குலம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலாளி, தொழிலாளி என்றும் வேறுபாடில்லாத சமரச மனப்பான்மையைக் கொண்டு மனிதநேயத்துடன் வாழவேண்டுமென்றும் உணர்த்தினார்.

உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்று வள்ளலார் கடவுளின் பெயரால் உயிர்க்கொலை செய்வதை அறவே வெறுத்தார். அனைத்து சமய நல்லிணக்கத்திற்காகவும், சன்மார்க்கத்திற்காகவும் தம் வாழ்நாளை அர்ப்பணித்தார்.

வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர். தமிழ்மொழியே இறவாதநிலை தரும் என்று கருதினார். பயில்வதற்கும், அறிதற்கும் மிகவும் எளிதானதாக பாடுவதற்கும் சாகா கல்வியை மிகவும் எளிமையாக அறிவிப்பதாகக் கூறினார்.



**செல்வி சே. சங்கீதா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல்

## கைபேசியை முறையாக கையாளுகிறோமா ?

பணம் இல்லாதவர்கள் கூட கைபேசி வைத்துள்ளனர். தற்போது சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவர் கையிலும் அலைபேசி ஆட்சி புரிகிறது. கைபேசியை பொறுத்தவரையில் அது வாழ்வின் இன்றியமையாத பொருளாக மாறிவிட்டது.

வீடு, கோவில், அலுவலகம், தொழிற்சாலை, கடைகள், பேருந்து, கழிப்பறை என்று எல்லா இடங்களிலும் கைபேசியைப் பயன்படுத்துகிறோம். வாகனம் ஓட்டும்போது கைபேசி ஒலித்தால் எடுக்காதே, அழைப்பது எமனாக இருக்கலாம் என்று கூறியும் பலர் வாகனம் ஓட்டும்போது கைபேசியை எடுக்கிறார்கள். பேருந்தில் பயணம் செய்பவர்கள் சுற்றி யாருமில்லாதது போல் சத்தமாக கைபேசியில் பேசுகின்றனர்.

பலர் பேசுவதே வாழ்க்கை என நினைத்துக்கொண்டு எப்போதும் கைபேசியில் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதிலிருந்து வெளிவரும் அதிர்வலைகள் காதுகளை பாதிக்கும் என கூறியும் திருந்துவதாக இல்லை. இந்த கைபேசியால் வீட்டில் உள்ளவர்களிடம், உறவினர்களிடம், நண்பர்களிடம் நேரில் கலந்துபேசி சிரிக்க மறந்துபோனோம். இதை அதிகமாக பயன்படுத்துவோர் தற்கொலை, பாலியல் தொந்தரவு ஆகிய பல சிக்கல்களில் மாட்டுகின்றனர். “செல்பி“ எடுப்பதால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. “ஓடி விளையாடு பாப்பா“ என்பதன் பொருள் தெரியாமல் இன்றைய குழந்தைகள் கைபேசியில் வீடியோ கேம் விளையாடுகின்றனர். “அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு” என்பதை உணர்ந்து கைபேசியை அளவோடு பயன்படுத்தி மகிழ்வோமாக !



**செல்வி வி. ஜனனி**
முதலாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல்

# சிந்தனைத் துளிகள்

## சுமையில்லாத வாழ்வு சுகமில்லை !

உதாரணம் சொன்னால் தானே
உணர ஆரம்பிக்கிறோம்
அதனால் உதாரணமாக
பனி சுமந்த புற்களுக்கு களைப்பில்லை
கனி சுமந்த கிளைகளுக்கு வலியில்லை
ஓயாமல் சிமிட்டுவதால் இமைகள் தேய்வதில்லை
சாயாமல் நிற்பதால் மரங்கள் சலிப்பதில்லை.
இடி விழுந்து பூமி உடைவதில்லை
மின்னல் வெட்டி வானம் கிழிவதில்லை
சுற்றுவதால் பூமிக்கு தலை சுற்றுவதில்லை.
துடிப்பதால் இதயத்திற்கு சோகமில்லை
விழுவதால் மழைத்துளிக்கு காயமில்லை
அழுவதால் பிறந்த சிசுவுக்கு நோவுமில்லை
காயாத மலரில்லை தேயாமல் நிலவில்லை
கொய்யாத மலர்கள் மாலையாவதில்லை
நெய்யாத நூல் சேலையாவதில்லை
தோல்விகள் என்றும் நிரந்தரமில்லை
வெற்றி என்பது தூரமில்லை !
சுமைகள் சுமையல்ல ஒத்துக்கொள்
தோல்விகள் தோல்வியல்ல ஏற்றுக்கொள்
வெற்றியை தக்க வைக்க பழகிக்கொள்
உதிப்போம் என நம்புவதால்
சூரியன் மறைகிறது
வளர்வோம் என நினைப்பதால்
பிறைநிலா தேய்கிறது. அதுபோல்....
முடியும் என போராடு !!
சுமையை சுகமாக்கி
உன் வாழ்க்கை உன் கையில்
உணர்ந்துகொள் !!!



**செல்வி. வி. ஜனனி**
முதலாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில் நுட்பவியல்

## விதவை

சூடுவது எல்லாம் வெள்ளை என்றால்
மல்லிகை பூக்கூட வெள்ளைதானே
அதை சூட உனக்கு ஏன் தடை!



**செல்வி. ச. பவித்ரா**
முதலாம் ஆண்டு
இளங்கலை இயற்பியல் துறை

## அகிம்சை

அகிம்சை அடுப்பு
அதில் அமைதி என்னும் நெருப்பு
சத்தமில்லாமல் உலையில் வேகட்டும் நம் இருப்பு
மனிதா அறிந்துகொள் உனது பிறப்பு....
மனிதனாய் பிறந்து விட்டானோ....
மற்ற உயிர்கள் எல்லாம் சாதா என்ற நினைப்பு
கடல் அலையின் சத்தத்தில் கூட
இன்னும் சுனாமியின் மரண ஓலம்
கேட்டுக்கொண்டே தானே இருக்கிறது.....
கிராமத்து மண்ணில் கூட இன்னும்
சாதிமத சண்டையால் சிந்திய இரத்த
வாடைகள் இன்னும் என்னை மூச்சடையச்
செய்கிறது.
பூக்களைக் கூட அமைதியாக பூப்பதை விரும்பும்
நமக்கு
சிற்றுயிர்களை துடிக்க துடிக்க பலி
கொடுக்கும் ஆர்வம் எதற்கு ?....
கணவன் அடித்தால் ஏற்றுக்கொள்ளும்
மனப்பக்குவம் மனைவிக்கு....
ஒரு சிறுஎறும்பு கடித்தாலோ ஏனோ
அதன்மீது கொலைவழக்கு
உயிர்கள் என்பது பெரிதேனும்...
அதுவே சிறியதேனும்
உயிரை மதிப்போம் !
பாரதம் காப்போம் !



**செல்வி. கோ. சங்கீதா**
இரண்டாமாண்டு
இளங்கலை உயிர்தொழில் நுட்பவியல்

## நட்பு

என்னை விட நல்ல தோழியை
நீ கண்டுபிடித்தால் என்னை கடந்து செல்
உன்னை தடுக்க மாட்டேன்
ஆனால் அவள் உன்னை விட்டு விலகிச்சென்றால்
பின்னால் திரும்பி பார் அங்கே
உனக்காக நான் இருப்பேன்
எப்போதும் நல்ல தோழியாய் !
பழகும் முன் தனிமை
பழகிய பின் இனிமை
பிரிந்தால் தான் தெரியும்
நட்பின் பெருமை



**செல்வி. ஜெ. பிரதிகா**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## பொய் மனிதன்

இந்த ஒற்றை உலகில்
இரட்டைவேடம் போடும் மனிதா !.....
பணம் என்ற போதையில் மிதந்து
சாதி என்னும் போர்வையில் ஒழிந்துகொள்ளும்
மனிதா ! நீ !!....
இவ்வுலகையே உன் உள்ளங்கைக்குள்
அடக்கினாலும்
உன் முடிவு என்னவோ
ஆறடி மண்ணுக்குள் தான்.....
ஆசை துரோகம் என்று நீ அணியும் முகமூடி...
உன் பிம்பத்தை வெளிப்படுத்தும் கண்ணாடி....
இன்னும் எத்தனை ? எத்தனை ?
மலரினைத் தேடும் வண்டினைப் போல்.....
அன்றாட வாழ்வில் நீ எதைத்தேடி
அலைகிறாய் என்று அறிவாயா ?
மற்றவர்களுக்காக வாழவேண்டி
பொய்யான முகத்தைக் கொண்டு வாழ்வதை
விட
உனக்காக, உன்னை நம்பி
உண்மை முகத்தை
இவ்வுலகிற்கு காட்டு !!.....
விடியல் பிறக்கும்... !!
உன்னை அறிவாய்.....
மனிதனாய்!!!......

## விவசாயம்

நிலங்கள் வீடு ஆயின
களங்கள் காடு ஆயின
கரும் மேகங்கள் காணவில்லை
கால்நடைகள் பேணவில்லை
நாளை வரும் பசிபோக்க
நாகரிகம் உதவவில்லை
ஏறு போன நிலங்கள்
கூறு போன மனைகள்
நிலத்தை விற்று பணத்தை போட்டால்
வங்கி பணம் வட்டித்தரும் -
சோறு தருமா ?



**செல்வி. எஸ். அகல்யா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை வணிக மேலாண்மை

## இராணுவம்

முரட்டு உருவம்
முறுக்கு மீசை
சிப்பாய் உடை
பெரிய துப்பாக்கி
என் அப்பாவின் அடையாளம்....
எங்க ஊரு அய்யனாரு சாமி
நவீனமாக வருவது போலிருக்கும்
பிழைப்புக்காக இராணுவத்திற்கு போனவர்கள்
நிலைத்திருப்பதில்லை...
நாட்டுக்காக போனவர்களுள் சிலர்
பிழைத்திருப்பதில்லை
எல்லையில் போர் என்றால் அது
முடியும் வரை அம்மாவிற்கு
உறக்கம் ஏதும் இல்லை !
அப்பாவிற்கு நோக்கம்
நாட்டை காப்பதன்றி
பதக்கம்--- ஏதுமில்லை
நாட்டின் கடைகோடியில்
நம்மைக் காக்கும்
இராணுவ வீரர்கள் வாழ்க !



**செல்வி சி. புனிதா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை நுண்ணுயிரியல்

## விவசாயி

தன் வாழ்வெல்லாம் ஓய்வின்றி
உழுதான், ஊரார் உணவுக்காக
பகல் இரவு பாராமல்
பம்பரமாய் சுழன்றான்
நம் உலகம் சுழல
மண்ணையே பொன்னாக்கினான்
உயிர் கொடுத்து விதையையே கதிராக்கினான்
ஆற்றிலே நீரெடுத்து
பயிர் தழைக்க வைத்தான்
சேற்றிலே கால்வைத்து
நித்தம் சோறு தந்தான்
பக்குவமாய் விதையிட்டு
வயல்சுற்றி பாத்திகட்டி
முளைசெழிக்க உரமிட்டு
புதுஉயிராய் பயிர் துளிவிட்டு
தைமாதம் முதல்நாளில்
பயிர் அறுவடை உரிகளின் பசிக்கு இவன்
உழைப்பே விடை....



**செல்வி. சி. வினிதா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை நுண்ணுயிரியல்

# சிந்தனைத் துளிகள்

## ஆசிரியர்

கல்லும் உடையாமல்
சிலையும் சிதறாமல்
எங்களை செதுக்கிய
சிற்பி அல்லவா நீங்கள் !
மழையின் அருமை தெரியாமல்
மழையைக் கண்டு ஓடுபவர்போல
உங்களைக் கண்டு ஓடினோம்
மழையின் அருமை கோடையில் தெரியும்
உங்களின் அருமை பெருமைகளை இப்போது
உணர்கிறேன்.
எத்தனை ஆயிரம் ஆசிரியர்கள் - ஆனால்
நோக்கம் லட்சியம் ஒன்றுதானே !
என் மாணவர்கள் முன்னேறவேண்டும்
வெற்றிபெற வேண்டும்
எத்தனை உயரிய எண்ணம்.....
நீங்கள் அல்லவா ? வணக்கத்திற்குரியவர்கள்
இன்று வரையிலும், இனிமேலும்
நாங்கள் காணும் வெற்றிகளுக்கு
நாங்கள் அடையும் புகழ்களுக்கு
உரியவர்கள் நீங்கள் தானே !



**செல்வி எம். திலோத்தி**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## விவசாயி

கை மறத்து உழைத்து உனக்கு
முதுகும் வயிறும் மறத்துப் போனது
அடிபட்டு.... அடிபட்டு.....
பச்சைத் தமிழா பசுமைக்காக
போராடுகிறாய் பச்சை உடையணிந்து !
சீரோடு வாழ்ந்த
நீ போராடி வாழ்கிறாய்

போராடி போராடி நீ சோரவில்லை
இல்லையேல்
யாருக்கும் சோறேயில்லை
உழவனே நீ....
வேண்டுவது யாருக்கும் புரியவில்லையே !



**செல்வி. எம். வினோதினி**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## பாசம்

அன்பான அப்பாவும்
நண்பனான அம்மாவும்
கிடைத்த குழந்தைகள் யாரும்
தடுமாறியதும் இல்லை
தடம்மாறியதும் இல்லை.....

## தன்னம்பிக்கை

தொட்டு விடும் தூரத்தில்
வெற்றி இல்லை
அதை விட்டு விடும் எண்ணத்தில்
நானும் இல்லை.....

## வெற்றி

வெற்றியை விட
தோல்விக்கு பலம் அதிகம் காரணம்
வெற்றி சிரிக்க வைக்கும்!
தோல்வி சிந்திக்க வைக்கும்!

## கல்லூரி

படிப்பு ஒரு தென்றல் காற்று
வீசும் போதுதான் அதன் வாசம் புரியும்
ஆசிரியர் ஒரு ஏடில்லாத புத்தகம் - பக்கம்
புரட்டாமல் படித்துக்கொண்டே இருக்கலாம்
ஆசிரியர் ஒரு புத்தகம்
அதில் நாங்கள் எழுத்துக்கள்
படிப்பு ஒரு மவுனக்கடவுள்
காலம் முழுவதும் நீ நீந்திக்
கொண்டே இருக்கலாம்
எந்நாளும் மகிழ்ச்சி தந்த நாட்கள்
கல்லூரியின் நாட்கள்
கல்லூரி ஒரு நந்தவனம்
அதில் நாங்கள் பூக்கள்......



**செல்வி. சு.முத்துமீனா**
முதலாம் ஆண்டு
இளங்கலை இயற்பியல்

## Dr. APJ Abdul Kalam Quotes

Past is a 'Waste Paper'
Present is a 'News Paper'
Future is a 'Question Paper'
So read and write carefully......
Otherwise we will be a 'Tissue Paper'
Black colour is sentimentally bad
But
Every blackboard makes the
students life 'bright'



**Ms. V. Mathumitha**
I MSW

# சிந்தனைத் துளிகள்

## என் தாய்

எந்த வலியாக இருந்தாலும்
எனக்கு கொடு, என்
பிள்ளைக்கு வேண்டாம் என்று
வேண்ட தாயால் மட்டும்தான் முடியும் . .
என் அம்மா ஏழைதான் ஆனால்
ஒருபோதும் என்னை ஏழையாக
வளர்த்தது இல்லை
தாய் தந்தையின் அருமை நீ
வளரும் போது தெரியாது
உன் பிள்ளையை நீ
வளர்க்கும் போதுதான் தெரியும்
கண்கள் பார்த்த முகம் ஓவியம்
கைகள் வருடிய முதல் காவியம்
உதடுகள் உச்சரித்த முதல் வார்த்தை
உள்ளம் உணர்ந்த முதல் பாசம்
அதுவே என் தாயின் நேசம் . . . !



**செல்வி. எஸ். கலைவாணி**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## தன்னம்பிக்கை

எந்த சாதியில் பிறந்தோம் என்பது
முக்கியமல்ல....
என்ன சாதிக்கப் பிறந்தோம் என்பது தான்
முக்கியம்
சாதி என்னும் முரண்பாட்டை தாண்டி வாழக்
கற்றுக்கொள்
சிந்தித்து செயல்படு பல சாதனைகளை
உருவாக்கு
இந்த உலகம் உன்னை நேசிக்கும்
உன் புகழை இந்த உலகம் வாசிக்கும்

## நம்பிக்கை

தவழ முடிந்தால் தவழ்வோம்
நடக்க முடிந்தால் நடப்போம்
ஓட முடிந்தால் ஓடுவோம்
ஆனால் ஒவ்வொரு நொடியும்
முன்னோக்கி தான் இருக்கவேண்டும்.



**செல்வி. எஸ்தர் நந்தினி**
முதுநிலை இரண்டாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## நம் உடல்நலத்திற்கு சில

அதிகாலை எழு
ஆகாயம் தொழு
இருதயம் துடிக்கவிடு
ஈர் அழுந்த பல் தேய்
உடல் வியர்வை கழி
உளளைச் சதை ஒழி
எருது போல் உழை
ஏழைபோல் உண்
ஐம்புலன் பதுக்கு
ஒழித்துவிடு புகை, மதுவை
ஓட்டம் போல் நட
ஒளடகம் பசி
அ.ஃ.தாற்றின் எ.ஃ.தாவாய்.........

### பொன்மொழி

பெரும் சாதனை செய்வதற்கு மூன்று
நிலைகளை கடந்தாக வேண்டும் அவை
ஏளனம், எதிர்ப்பு, அகங்காரம்..........

### உன் இப்போதைய நிலை

கண்டு துவளாதே
நம்பிக்கையை இழக்காதே !
கொஞ்சம் பொறுமை
காத்துக் கொள்
உனக்கு எல்லாம்
நல்லதே நடக்கும்.



**செல்வி டி. சினேகா**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## APJ

தடுக்க விழுந்தால் மட்டும் அ. .. ஆ . .
சிரிக்கும் போது மட்டும் இ. . . ஈ . . .
சூடு பட்டால் மட்டும் உ. . . ஊ . . .
அதட்டும் போது மட்டும் எ . . . ஏ . . .
ஐயத்தின் போது மட்டும் ஐ. . .
ஆச்சரியத்தின் போது மட்டும் ஒ . . ஒள . ..
வக்கணையின் போது மட்டும் ஒள . . .
விக்கலின் போது மட்டும் ஃ . . .
----- APJ அப்துல்கலாம்
நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை
இல்லாமல் இருக்கலாம் ஆனால்
அனைவருக்கும் திறமையை
வளர்த்துக்கொள்ள ஒரே மாதிரி
வாய்ப்புகள் உள்ளன
வாய்ப்புக்காக காத்திருக்காதே
உனக்கான வாய்ப்பை
நீயே ஏற்படுத்திக் கொள்.



**செல்வி. எஸ். சிவசங்கரி**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

# சிந்தனைத் துளிகள்

## அம்மா

விழிகளின் அழுதிட
இதழ்களின் சிரித்திட
இமைகளின் உறங்கிட
இம்சையை ரசித்திட
வெற்றியின் களித்திட
தோல்வியில்துவண்டிட
முகத்தில் மகிழ்ந்திட,
சிற்பத்தை செதுக்கிட
உதிரத்தை துடைத்திட
உயிருடன் கலந்திட,
இன்பத்தைப் பெருக்கிட,
இன்னிலை இறைவனால்
பரிசளிக்கப்பட்ட கலைத்தீட்டிய
தேவதை நீ . . .
அம்மா,
உனக்கு நான் பட்ட கடனை
எத்தனை பிறவி எடுத்தும் தீர்க்க
முடியாத நிலையின் ஒன்று மட்டும்
உறுதி செய்கிறேன் . .உன்,
உயிர் துளியாக கருதி எனக்கு நீ
ஆற்றியவைகளை மறந்திடும் நாளொன்றில்
இந்த மகளுக்கு இவ்வுலகில் அளித்திடும்
பெயர் பிணம் !
பிறக்கும் போதே உன் பாசம்
எனக்கு கிடைக்க வேண்டும்
இருக்கும் வரை அதே நினைவுடன்
இருக்க வேண்டும்
மறக்கும் நிலை வந்தால்
நான் இறக்க வேண்டும் !!!
படுத்துக் கொண்டும்
சொர்க்கத்தை காணலாம்
தலையணையில் அல்ல
தாயின் மடியில்
என்னை பத்து மாதங்கள்
கருவறையில் சுமந்தவள்
என் தாய் என்றால்
என்னையும் என் தாயையும்
தன் நெஞ்சிலே சுமந்தவர் என்
அப்பா !!!



**செல்வி. ஏ. பூங்குழலி**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## APJ

படிக்க கலாம்
உழைக் கலாம்
முயற்சிக் கலாம்
நீயும் ஆ கலாம்
அப்துல் கலாம்
வாய்ப்புக்காக காத்திருக்காதே
உனக்காக வாய்ப்பை
நீயே ஏற்படுத்திக்கொள்.
சிக்கல்களை எதிர்கொள்ளும் போதே
சில திறமைகள் வெளிப்படுகின்றன
கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே !
அது உன்னை கொன்று விடும்
கண்ணை திறந்து பார் நீ
அதை வென்று விடலாம் !



**செல்வி. வி. கீர்த்திகா**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

## உலகம்

வாழ்ந்து உயர்ந்துவிட்டால்
பொறாமையில் பேசுவார்கள்
தாழ்ந்து வீழ்ந்துவிட்டால்
கேவலமாக பேசுவார்கள்
இவ்வளவுதான் உலகம்.

## பொய்

என்றாவது என் ஞாபகம் வந்தாலும் கூட
தயவுசெய்து என்முன் வந்துவிடாதே
மீண்டும் என் பொய்யான
நடிப்புக்கு முன் என்னால்
ஏமாறமுடியாது.

## உறவு

நான் இருக்கும்போது
என் மனதை புரிந்து கொள்ளாத
எந்த உறவும்
நான் இறந்தபின்
என் அருகில் கூட வேண்டாம்.

## நட்பு

ஆயிரம் முறை முயற்சி செய்
உன் எதிரியை நண்பணாக்க
ஆனால் ஒருமுறை கூட
முயற்சி செய்யாதே !
உன் நண்பனை எதிரியாக்க.



**செல்வி சி. அபிதா**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி

# சிந்தனைத் துளிகள்

## அறிஞர்களின் பொன்மொழிகள்

- முட்டாள் அழகான இடத்தை தேடுகிறான்
  புத்திசாலி இருக்கும் இடத்தை அழகாக்குகிறான்.
- கரையான் போல் பிறர் பொருளை கெடுத்து மகிழாதே !
  தேனீ போல் பிறருக்கு கொடுத்து மகிழ்.
- மீதம் எவ்வளவு உள்ளது என்று தெரியாமலேயே
  நாம் செலவு செய்வது காலம் மட்டுமே !
- வரலாற்றை எழுதுவதை விட
  அதைப் படைப்பது முக்கியம்.
- நினைத்ததெல்லாம் நடக்கவில்லை என்று
  நினைக்கவில்லை என்றால் எதுவும் நடக்காது.
- உன்னால் செய்யமுடியாத அனைத்தையும் உலகில்
  எவனோ செய்துகொண்டு தான் இருக்கிறான்.
- மரக்கிளையில் அமரும் பறவை கிளை உடைந்து விடும் என நினைப்பதில்லை
  அதன் நம்பிக்கை கிளையில் இல்லை. அதன் சிறகில் உள்ளது.
- இவ்வுலகில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றில் ஒருபக்கம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதை ஒதுக்கப்பட்ட பக்கமாகவே ஆக்குவதும், இல்லை உனக்கான பக்கமாக மாற்றுவதும் உன் கையில் உள்ளது.



**செல்வி. வி. ஜனனி**
முதலாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல்

## தலைவர்களின் பொன்மொழிகள்

**சேகுவேரா**
நீ ஊமையாக இருக்கும்வரை உலகம்
செவிடாய் தான் இருக்கும்
புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை
மண்ணில் விதைக்கப்படுகிறார்கள்.
ஒவ்வொரு அநீதியையும் கண்டு ஆத்திரத்தில்
அதிர்ந்து போவாயானால் நீ எனது தோழன்
ஒருவரின் காலடியில் வாழ்வதை விட எழுந்து
நின்று உயிரை விடுவது மேல்.

**மாவீரன் அலெக்ஸாண்டர்**
இங்கே உறங்குபவன் உலகையே வென்றவன் என்று பொறித்து விடுங்கள்.
ஆனால் போகும்போது எதையும் கொண்டு செல்லவில்லை என்பது எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும். அதனால் என் இறுதி ஊர்வலத்தின் போது என் கைகளை வெளியே தெரியும்படி கொண்டுசெல்லுங்கள்.
துணிவிருந்தால் வாழ்ந்து பார்
சாதித்து பார்.

**சார்லி சாப்ளின்**
உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம்
உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.
கண்ணாடி தான் எனது சிறந்த நண்பன்
ஏனென்றால் நாம் அழும்போது அது சிரிப்பதில்லை.



**செல்வி. ஜெ. பிரத்திகா**
முதலாம் ஆண்டு
இளங்கலை சமூகப்பணி





**திருமதி. வி. ரேகா**
விரிவுரையாளர்
சமூகப்பணித் துறை








**செல்வி.சி. அபினயா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை வணிக மேலாண்மை



**செல்வி. வே. ஜெயக்கொடி**
இரண்டாம் ஆண்டு
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல்







**திருமதி. டி. சுகாசினி**
விரிவுரையாளர்
சமூகப்பணித் துறை





**செல்வி. கே. தனபிரியா**
மூன்றாம் ஆண்டு
இளங்கலை உயிர்வேதியியல்



**திருமதி. வி. ரேகா**
விரிவுரையாளர்
சமூகப்பணித் துறை




The End

# ஆசிரியர் கைவண்ணம்

### வாழ்க்கை

வரலாறு என்பது வந்துபோனவர்களின்
தொகுப்பல்ல,
சாதனைகளைத் தந்து போனவர்களின் தொகுப்பு
தன்னம்பிக்கையோடு எழுந்து நின்றால் இமயம்
கூட நம் இடுப்பளவு தான்
முடியாது என்பது மூடத்தனம்
முடியுமா என்பது கோழைத்தனம்
முடியும் என்பது மூலதனம்.
வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்
சவால்கள் இல்லாத வாழ்க்கையில் சாரமில்லை
நேர்க்கோடுகள் ஓவியமாவதில்லை.
வளைந்தும் நெளிந்தும் உள்ள கோடுகளே
ஓவியங்களை உருவாக்குகின்றன.
வாழ்க்கையும் அப்படித்தான்.
வாழ்க்கையில் போராட்டம் தான்
நாம் உயிரோடு இருப்பதை மெய்ப்பிக்கிறது.
உயிருள்ள மீன்கள் எதிர்நீச்சல் போடுகின்றன.
திறமைகளை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்
உருளுகின்ற கற்கள் தான்
உருண்டையாகின்றன.
வெற்றி பெற்றால் மகிழ்ச்சி
தோற்றுப் போனால் அனுபவம்
நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று என்பது கையில்
வீணை வாசிப்போம் !
வாழ்வை நேசிப்போம் !
உலகைக் காப்போம்.



**முனைவர் ஆர். அகிலா**
**வணிக மேலாண்மைத் துறை**

### லஞ்சம்

மகனின் பிறப்பு சான்றிதழுக்கு
லஞ்சம் கொடுக்கும் அப்பா !
அப்பாவின் இறப்பு சான்றிதழுக்கு
லஞ்சம் கொடுக்கும் மகன் !
- இது தான் இந்தியன் !!



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

### வெற்றிக்கனி

இளைஞனே எழுந்து வா !
இந்த அழகான உலகம்
உன்னை வரவேற்க காத்திருக்கிறது
ஏன் கலங்குகிறாய் ?
பாறை கலங்கியிருந்தால் அழகான
சிற்பத்தைப் பெற்றிருக்காது.
சிப்பி கலங்கியிருந்தால் அழகான
முத்தைப் பெற்றிருக்காது.
ஒருதாய் கலங்கியிருந்தால் அழகான
குழந்தையைப் பெற்றிருக்க மாட்டாள்
நீ கலங்காதே !
தன்னம்பிக்கை விதை விதைத்து
முயற்சி தண்ணீர் விட்டால்
வெற்றிக்கனி கிடைக்காமலா
போய்விடும்.
இளைஞனே எழுந்து வா !



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

### பண்பாட்டுச் சிதைவு

- பருவத்து இளைஞர்கள்
  பண்பாட்டு மீறலால்....
  பயனற்றுப் போகிறார்கள்.
  காமத்தால் கன்னியர்கள்
  சூறையாடப் படுகின்றனர்....
- பூக்களை வெட்டும் கோடாரி போல்
  சிறுமியர்கள் சிதைப்பு.....
  இணைய விளையாட்டு
  தற்கொலையாய்....
  மதுவினால் தலைமுறைச் சீரழிவு....
  பொன்நகை மிரட்டலால்
  பொய்த்தது இல்லறம்....
- குளங்களும், ஏரிகளும்
  மாடமாளிகையாய்...,
  விவசாயிகள்
  போராட்டக் காரர்களாய்....
- தன்னலமற்ற
  தியாகிகளின் பூமி
  வஞ்சகர்களின் பிடியில்....
  இன்றைய உலகமோ !!
  அறிவின் உச்சத்தில்
  ஊழல் எங்கெங்கும்
  வஞ்சகமோ ஊர்கோலமாய் !!!



**முனைவர். அ. ஜோஸ்பின் புனிதா**
**தமிழ்த் துறை**

# சிந்தனைத் துளிகள்

### "கஜா" - விவசாயி

விடியும் முன் எழுந்தவன்
வாழ்க்கை விடியாமலே
போகிறதே..... விவசாயி

திண்ணையோரம் தென்னை வளர்த்தேன்
தெருவோரம் புன்னை வளர்த்தேன்
கொல்லையோரம் கொய்யா வளர்த்தேன்
மூலையோரம் முருங்கை வளர்த்தேன்
சந்தோரம் வேம்பு வளர்த்தேன்
வாசலிலே வாழை வளர்த்தேன்
பிள்ளையாக எண்ணி வளர்த்தேன்....
பிள்ளையில்லா குறை மறந்தேன்

தென்னை தேடி தேனீ வந்தது.....
புங்கை தேடி புறா வந்தது.....
கொய்யா தேடி அணில் வந்தது.....
முருங்கை தேடி குருவி வந்தது.....
வேம்பை தேடி எல்லாம் வந்தது.....
வாழை தேடி உறவு வந்தது.....
எங்கிருந்தோ "கஜா" வந்தது
என்பிள்ளைகளை கொண்டு சென்றது.....

துணையாக நின்ற என்
மரமெல்லாம் என்னை தனிமரமாக
விட்டுச் சென்றதென்ன....

அழுக கண்ணீரில்லை
குடிக்க தண்ணீரில்லை
உறங்க திண்ணையில்லை
உதவிக்கு யாருமில்லை
விவசாயி.....
டெல்டா... விவசாயி
டெல்டாவை பாதுகாப்போம் !



**திருமதி. டி. கலையரசி**
**இயற்பியல் துறை**

### நேசிப்பு

தாமரையைத் தாங்குவது தண்டு
சுற்றித் திரிவது வண்டு - தாமரைத்
தன்னைத் தாங்கும்
தண்டை நேசியாமல்
சுற்றித் திரியும் வண்டையே நோக்குகிறது
அதுபோல் - நீயும்
சுற்றித் திரிபவர்களை நேசியாதே !
தன்னைத்
தாங்குபவர்களை நேசி . . .



**திருமதி. எஸ். சர்மிளாதேவி**
**கணிதவியல் துறை**

### சிந்தனைக்குச் சில

உங்கள் மனதைப் பொறுத்து
எண்ணங்கள் அமையும் !
உங்கள் எண்ணங்களைப் பொறுத்து
வாழ்க்கை அமையும் !
உங்கள் வாழ்க்கையைப் பொறுத்து
வெற்றி அமையும் !
உங்கள் வெற்றியைப் பொறுத்து
ஆரோக்கியம் அமையும் !
உங்கள் ஆரோக்கியம் பொறுத்து
மனம் அமையும் !
உங்கள் மனதைப் பொறுத்து . . . . .
இது ஒரு சக்கரம்

கழிவறை சுத்தம் செய்யும் பாக்கியம்
கிடைத்தாலும் உன்னுடைய வேலைப்பாடு
அவ்வளவு கலைநயமும் கவித்துவமும் மிக்கதாய்
இருக்க வேண்டும்.
செல்வத்தை நன்முயற்சியால் அடையலாம்.
ஆரோக்கியத்தை நல் உணவினால் அடையலாம்.
சுகத்தை நல் ஆரோக்கியத்தால் அடையலாம்.
புகழை நல் ஒழுக்கத்தால் அடையலாம்.
பொறாமை உள்ளவனிடம் புண்ணியம் இருக்காது.
சுகத்தை விரும்புவனிடம் கல்வி இருக்காது.
பேராசை உள்ளவனிடம் நாணம் இருக்காது.
சோம்பல் உள்ளவனிடம் செல்வம் இருக்காது.
உறுதி இல்லாதவனிடம் எதுவுமே இருக்காது.



**முனைவர் வெ.வேதவள்ளி**
**தமிழ்த்துறை**

### பெயர்

இன்னது என்று அறியாது
வந்தவர்களை
இன்முகத்தோடு ஆறுதல்
அன்னை நீயே!
பூக்கள் கொடியேற்ற,
தேனீக்கள் இன்னிசை முழங்க
விழியின் ஒளியாம்!
எம் கல்லூரி மாணவர்கள்
பெற்ற விருதினை
கல்லூரி தின விழாவில் முழங்கி
ஒருத்தி நாட்டில் பல பெண்கள்
சரித்திரம் படைக்க
மன்னர் கல்லூரியில் இருந்து வந்த
மங்கை நீயே!



**செல்வி. ர. திவ்யா**
**ஆய்வக உதவியாளர்**

# சிந்தனைத் துளிகள்

## பாசப் புயல்

நான் புழுவல்ல புயல்...
நான் விதையல்ல,
முளைக்கும் துளிர்...
பட்டது தோல்வியல்ல....
வாழ்க்கைப் பாடம்!
துயரத்தில் துளிர்த்தவர் பலர்....
என் துயரம் எல்லாம்
என் வாழ்க்கையின் உரம்!
உழுது கொண்டே இருப்பேன்,
மழையென்னும் வாய்ப்பு
கிடைக்கும் வரை!
ஐயிரண்டு மாதங்கள் காத்திருந்தேன்....
உன் பிஞ்சு இதழ் முத்தத்திற்காய்.....
என் செல்வமே.....
அம்மா.....
இதயம் ஒரு வினோதமான சிறை....
ஏனென்றால் , இதில்
குற்றம் செய்பவர்கள்
மாட்டிக் கொள்வதில்லை.....
பாசம் வைப்பவர்கள் தான்
மாட்டிக் கொள்கிறார்கள்!



**திருமதி. வி. ரேகா**
**சமூகப்பணித் துறை**

## அழகு குறிப்புகள்

1. செம்பருத்தி பூவை காயவைத்து துாளாக்கி தலையில் சீயக்காய் போலத் தேய்த்து குளித்து வந்தால் பொடுகு தொல்லை நீங்கி, தலைமுடி நீண்டு வளரும்.

2. 1 ஸ்பூன் பச்சை பப்பாளி பேஸ்ட், 1 ஸ்பூன் பழுத்த பப்பாளி பேஸ்ட் இரண்டையும் கலந்து முகத்தில் பூசவும், 15 நிமிடம் கழித்து அலசினால் முகம் பளிச்சென்று இருக்கும்.

3. காரட், உருளைக்கிழங்கு, தக்காளி, பூசணி, இவற்றை சிறு துண்டுகள் எடுத்து அரைத்து அதனுடன் பயித்த மாவை சேர்த்து முகத்தில் போட்டு 10 நிமிடம் கழித்து கழுவினால் முகம் சோர்வு இல்லாமல் புத்துணர்ச்சி பெறும்.



**திருமதி. எம். சந்திரா**
**சமூகப்பணித் துறை**

## தாய்

ஐயிரண்டு திங்கள் கருவினில் சுமந்தாய்
ஆகாரத்திற்கு மார்பினில் சுமந்தாய்
அயர்ந்து துாங்குகையில் மடியினில் சுமந்தாய்
அத்தனை சோகங்களையும் மனதினில் சுமந்தாய்
கருவினில் உயிர் கொடுத்தாய்....,

**அ**ன்பை அள்ளிக் கொடுத்தாய்
**ஆ**லமரமாய் ஆளவைத்தாய்
**இ**ன்பமாய் பேசவைத்தாய்
**ஈ**கைக்குணம் கொள்ள வைத்தாய்
**உ**ண்மையே பேச வைத்தாய்
**ஊ**க்கப்படுத்தியே உயரவைத்தாய்
**எ**ளிமையாய் வாழவைத்தாய்
**ஏ**ணியில் இருக்க வைத்தாய்
**ஐ**யமின்றி வாழவைத்தாய்
**ஒ**ற்றுமையை உணரவைத்தாய்
**ஓ**ங்கிய புகழ் அடையவைத்தாய்

கல்வியை கசடற கற்கவைத்தாய்
அடுப்படியில் வெந்தாய், நொந்தாய்
உறக்கம் துறந்தாய், இறுதியில் இதயம்
மலர்வித்தாய்
உயர்ந்தாய் சிறந்தாய்
அறிந்தாய் - அவள் தான்
என் தாய் ! என் தாய் !! என் தாய் !!



**முனைவர் ஆர். அகிலா**
**வணிக மேலாண்மைத் துறை**

## ஒரு குட்டிக் கதை

ஒருநாள் சாவியைப் பார்த்து சுத்தியல் கேட்டது
உன்னை விட நான் வலிமையானவனாக
இருக்கிறேன்
ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான்
மிகவும் சிரமப்படுகிறேன்.
ஆனால் நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே
அதெப்படி ? என்றது.
அதற்கு சாவி
நீ என்னை விட பலசாலிதான்
நானும் ஒப்புக்கொள்கிறேன்
பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய்
ஆனால் நானோ பூட்டின் இதயத்தை தொடுகிறேன்
என்று சொன்னதாம்.

**நீதி** : அன்பு உலகை ஆளும்



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

## வரலாறும் வாஸ்கோடகாமாவும்

இன்று உலகத்தை சுற்றிவருவதற்கு கடினமாக இருப்பதாக தெரியவில்லை. அன்றைய நிலைவேறு. உலகில் செல்வம் கொழிக்கும் ஒரு நாடு, வாசனை திரவியங்களும், பருத்தியும் மிகுந்து கிடக்கும் ஒரு நாடு. அங்கு சென்றால் தங்கள் நாட்டு வர்த்தகம் நிலைபெறும். பெரும்பொருள் ஈட்டலாம். செல்வம் கொழிக்கும் என்று கனவோடு பலர் இந்தியாவை நோக்கி படையெடுத்தனர்.

எல்லோராலும் கண்டுபிடிக்க முடிந்ததா ? முடியவில்லை ! ஒருவருக்கு அது சாத்தியமாயிற்று. “அவர் தான் வாஸ்கோடகாமா” போர்ச்சுகல் நாட்டில் இருந்து பல்வேறு போராட்ட இன்னல்களுக்கு இடையே 1498-ல் தென்னிந்தியாவில் உள்ள கோட்டையை வந்தடைந்தார். இந்தியாவை தேடிப் புறப்பட்ட போதுதான் உலகில் பல்வேறு நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரியநாடு தான் அமெரிக்கா. இந்தியா கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் உலக வரைபடம் சத்தமின்றி தன் தோற்றத்தைக் கண்டது. அப்படி என்னதான் சிறப்பு இந்தியாவில் ? ஆம் என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் - அவர்களுக்கு தேவையான எல்லா வளமும் இருந்தது.

ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் உணவுக்காக மாமிசம் பதப்படுத்த உப்பு மட்டும் போதாது, அதனோடு சேர்க்க மிளகு (கருப்பு தங்கம்) தேவைப்பட்டது. அதற்காக அரேபிய வியாபாரிகள் மிளகை தங்கத்திற்கு விற்றார்கள். எத்தனை காலத்திற்கு தான் தங்கத்தை விற்கமுடியும் ?

அதனால் மிளகைத் தேடி கூட்டம் கூட்டமாக இந்தியாவிற்கு வந்தார்கள். அங்கிருந்து வந்த பேரீச்சை மற்றும் குதிரைகளை விற்று இங்கிருந்து மிளகு, கிராம்பு, வாசனைத்திரவியங்கள், பட்டு, பவளம் ஆகியவற்றை குறைந்த விலையில் வாங்கி தங்கத்திற்கு விற்று விடுவார்கள். அதோடு கீழ்த்திசை நாடுகள் செல்வதற்கு இந்தியாவை தொட்டுவிட்டுதான் செல்லமுடியும். மெல்ல மெல்ல இந்தியா ஐரோப்பாவின் சந்தையாக மாறிவிட்டது.



**முனைவர். கோ. ஜெகதீஸ்வரி**
**வரலாற்றுத் துறை**

## ஊக்கம்

எல்லோரும் பயணிக்கிறார்கள்
என்று நீயும் பின்தொடராதே !
உனக்கான பாதையை
நீயே தேர்ந்தெடு.....

எத்தனை கைகள்
என்னை தள்ளிவிட்டாலும்
என் நம்பிக்கை
என்னை கைவிடாது.

பறப்பதற்கு வசதிகள் இருந்தாலும்
தரையில் இருக்கவும்
கற்றுக்கொள்....
சிறகுகளை இழந்தாலும்
வருந்தமாட்டாய்.....

தனித்துப் போராடி கரைசேர்ந்த பின்
திமிராய் இருப்பதில் தப்பில்லையே !
எப்போதும் என்
அடையாளத்தை யாருக்காகவும்
விட்டுக்கொடுக்க மாட்டேன்...

குறி தவறினாலும்
உன் முயற்சி
அடுத்த வெற்றிக்கான
பயிற்சி...
தோல்வி உன்னை
துரத்தினால்
நீ வெற்றியை
நோக்கி ஓடு....

முடியும்வரை
முயற்சிசெய்
உன்னால் முடியும் வரையல்ல
நீ நினைத்ததை
அடையும் வரை...,

எதிரி இல்லை
என்றால் நீ
இன்னும் இலக்கை
நோக்கி பயணிக்கவில்லை
என்று அர்த்தம்.

தொடர்ந்து முயற்சி செய்து
கொண்டே இருங்கள்
தோல்வி கூட ஒருநாள்
இவள் அடங்கமாட்டாள் என்று
உன்னிடம் தோற்றுவிடும்.



**திருமதி. டி. கலையரசி**
**இயற்பியல் துறை**

## சிந்தனைத் துளிகள்

### உணவே மருந்து

சிறுநீரகத்தில் கல் தோன்றுவதற்கான காரணத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், வாழைத்தண்டு சாற்றுக்கு சிறுநீரை பெருக்கும் தன்மை உண்டு.எனவே, இதை நீர்ச் சுருக்கு, எரிச்சல் போன்றவை தீர அருந்தி வரலாம். மேலும், இது தேவையற்ற உடல் பருமனையும் குறைக்கும். சிறுநீரக கற்கள் விரைவில் கரையவும், குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது வாழைத்தண்டு ஜூஸ் குடிக்க வேண்டும். வாழைத்தண்டை சுட்டு, அதன் சாம்பலை தேங்காய் எண்ணெய்யில் கலந்து பூசிவர தீப்புண், காயங்கள் ஆறும். சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் வாழைத்தண்டை வாரம் மூன்று முறை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இதை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால், ஆரம்ப நிலையில் உள்ள கற்களை மிக எளிதாகக் கரைத்து விடலாம்.

**கறிவேப்பிலை**

- வெறும் வயிற்றில் 15 கறிவேப்பிலை இலையை உட்கொண்டு வந்தால், வயிற்றைச் சுற்றியுள்ள அதிகப்படியான கொழுப்புகள் கரைந்து, அழகான மற்றும் எடுப்பான இடையைப் பெறலாம்.
- சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், தினமும் காலையில் கறிவேப்பிலையை பச்சையாக உட்கொண்டு வந்தால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு சீராக இருக்கும்.
- கறிவேப்பிலையை தினமும் சிறிது உட்கொண்டு வந்தால், முடியின் வளர்ச்சியில் நல்ல மாற்றத்தைக் காண்பதோடு, முடி நன்கு கருமையாகவும் இருப்பதை உணர்வீர்கள்.
- சளித் தேக்கத்தில் இருந்து நிவாரணம் பெற, ஒரு டீஸ்பூன் கறிவேப்பிலை பொடியை தேன் கலந்து தினமும் இரண்டு வேளை உட்கொண்டு வந்தால், உடலில் தேங்கியிருந்த சளி முறிந்து வெளியேறிவிடும்.

- நன்கு பழுத்த தக்காளி இரண்டு எடுத்து, சிறிது சிறிதாக அரிந்து, மிக்ஸியிலிட்டு, ஜூஸ் எடுத்து வெறும் வயிற்றில் காலையில் பருகி வந்தால் போதும், தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.
- கண்களுக்கு மிகவும் நல்லதான வைட்டமின் ஏ சத்தினை அதிக உணவுகளில் பெற முடியாது. அதேபோல் வைட்டமின் கே

**தக்காளி**

- நன்கு பழுத்த தக்காளி இரண்டு எடுத்து, சிறிது சிறிதாக அரிந்து, மிக்ஸியிலிட்டு, ஜூஸ் எடுத்து வெறும் வயிற்றில் காலையில் பருகி வந்தால் போதும், தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.
- கண்களுக்கு மிகவும் நல்லதான வைட்டமின் ஏ சத்தினை அதிக உணவுகளில் பெற முடியாது. அதேபோல் வைட்டமின் கே சத்தும் அரிதான ஒன்று. இந்த வைட்டமின் இரத்தக் கசிவுகளை கட்டுப்படுத்த உதவுகிறது.
- ஆரோக்கியமான முறையில் உடல் எடையை குறைக்க தக்காளி பெரிதும் உதவுகிறது. கோடைக்காலத்தில் முகத்தில் ஏற்படும் முகச்சுருக்கங்கள் மறைய தக்காளிச்சாற்றை முகத்தில் பூசி வருவதால் தோல் மென்மையடைவதுடன் குளிர்ச்சியும் உண்டாகும்.

**இயற்கை முறையை பயன்படுத்தி நோய்களுக்கு தீர்வு**

- **ரத்தம் சுத்தம் பெற, ரத்தம் விருத்தியாக**: தினமும் அருகம்புல் பானம் அருந்தி வந்தால் ரத்தத்தை சுத்தம் செய்வதோடு ரத்த விருத்தி உண்டாகும். உள்வெளிப் புண்கள் ஆறும்.
- **வயிற்றுப்புண் குணமாக**: தினமும் 1 குவளை திராட்சைப் பழச்சாறு அருந்தி வர வயிற்றுப்புண் குணமாகும்.
- **மார்புச்சளி தீர**: ஏலக்காய்ப் பொடியை நெய்யில் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர மார்புச்சளி தீரும்.
- **சிறுநீர் கோளாறு நீங்க**: முலாம்பழம் சாப்பிட்டு வந்தால் சிறுநீர் கோளாறுகள் குணமாகும்.
- **முகத்தில் உள்ள கட்டிகள் குணமாக**: முகத்தில் அடிக்கடி சந்தனம் குழைத்துப் பூசிய பின் அது காய்ந்த பிறகு குளிர்ந்த நீரில் முகம் கழுவி வந்தால் முகத்தில் உள்ள கட்டிகள் குணமாகும்.



முனைவர். எஸ். மணிமேகலை
உயிர்வேதியியல் துறை

## கல்லூரி எனும் கருவறை

அன்னையின் கருவறை ஒன்றே
அனைவரும் அறிந்தது
ஆண்டுகள் மூன்றும் அதுபோல
இங்கு வளர்ந் தோம்
இயன்ற வரை இடர்களை தாண்டி
நன்கு பயன்றோம்
ஈன்ற தாயைப் போல ஆசிரிய
அன்னைகளோடு வளர்ந்தோம்
உயர்வான எண்ணங்களை உரிமையாக
அவர்களிடமிருந்து உணர்ந்தோம்
ஊரே மெச்சினாலும் உன்னிடம்
மட்டுமே சரணடைந்தோம்
எண்ணங்களை மெழுகுகேற்றி எப்போகம்
உனை எண்ணி இருப்போம்
ஏற்றங்கள் வந்தாலும் உனை
ஊயிராய் மதிப்போம்
எங்கள் கல்லூரி எனும் இன்னொரு
கருவரையை உறவாகத் துதிப்போம்



**முனைவர். சி.சித்ரா**
**முனைவர் ப.காமாட்சி**
**நிலத்தியல் துறை**



## மன மகிழ்ச்சி

காட்டில் இருந்த அணில் ஒன்று மரத்தின்மேல் தாவி ஓடித் துள்ளிக் குதித்து விளையாடியது. ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவும் போது அதன் பிடி தவறியது. அதனால் அது மரத்தின் அடியில் தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்தின் மேல் விழுந்தது. சிங்கம் திடுக்கிட்டு விழித்தது.

அணில் அதன் எதிரே பணிந்து மண்டியிட்டு உடலைக் குறுக்கி நடுங்கிக் கொண்டிருந்தது. சிங்கம் அதை கோபத்துடன் உற்றுப் பார்த்தது. “என் கேள்விக்குப் பதில் சொன்னால் நான் உன்னை உயிரோடு விடுவேன்” என்றது.

“கேளுங்கள் அரசே எனக்குத் தெரிந்ததைச் சொல்வேன்” என்று பயத்துடன் நடுங்கியபடியே பதில் சொன்னது அணில். ”நீ நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கிறாய், மகிழ்ச்சி உன்னை விட்டு விலகுவதே இல்லை. நான் உன்னைப் போல் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புகிறேன். ஆனால் எனக்கு துன்பமும் கோபமும் தான் எப்போதும் நிறைந்துள்ளன. நான் இந்தக் காட்டின் அரசனாயிருந்தும் எனக்கு ஏன் மகிழ்ச்சி கிடைக்கவில்லை? இந்த சந்தேகத்திற்கு நீ சரியாகப் பதில் சொன்னால் உன்னை உயிருடன் விடுவேன்!” என்று சிங்கம் அணிலிடம் கூறியது. “அரசே தங்கள் கேள்விக்கு நான் உண்மையான பதில் சொல்கிறேன். ஆனால் மரத்தின் மேல் ஏறிக் கொண்டு சொல்ல எனக்கு உத்தரவு கொடுங்கள்!” தான் சொல்லும் பதில் சிங்கத்திற்கு பிடிக்காவிட்டால் தன் உயிர் உடலில் தங்காது என்பதை உணர்ந்த அணில், முன்னெச்சரிக்கையாக அப்படிக் கூறியது. அதன் கருத்தைப் புரிந்து கொண்ட சிங்கமும் அதற்கு அனுமதி அளித்தது. அணில் விரைந்து மரத்தின் மேல் ஏறிக் கொண்டது. அரசே, நான் கள்ளம் கபடமின்றி வாழ்கிறேன். உண்மையான உள்ளம் கொண்ட எனக்கு, மற்றவர்களுக்கு கேடு செய்யத் தெரியாது. அதனால் நான் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இதுதான் என் மகிழ்ச்சிக்குக் காரணம்!” அணில் சொல்வதைச் சிங்கம் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தது. அணில் மேலும் தொடர்ந்து பேசியது.

“மனமகிழ்ச்சி என்றால் என்ன என்பது உங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. உங்களால் அமைதியாக தூங்கக்கூட முடியாது. ஏனென்றால் ஒரு பாவமும் அறியாத விலங்குகளை இரக்கமின்றி கொன்று திண்கிறீர்கள். நானோ எனக்கு கிடைக்கும் இலைகளையும் பழங்களையும் மற்ற அணில்களுடன் பங்கிட்டுக் கொண்டு உண்கிறேன். நீங்கள் மற்றவர்களிடம் அன்பு செலுத்தவதில்லை, வெறுக்கிறீர்கள், நானோ பிறரை நேசிக்கிறேன்.

என் தந்தையிடம் நான் கற்றுக்கொண்ட இந்த உண்மைகளை நீங்களும் நன்கு புரிந்து கொள்ளுங்கள். நற்செயலாலும் நல்ல குணத்தாலும் தான் நமக்கு உண்மையான மனமகிழ்ச்சி “கிடைக்கும்”. இவ்வாறு அணில் கூறக் கேட்ட சிங்கம் தன் மகிழ்ச்சியின்மைக்கு காரணத்தை தெரிந்து கொண்டது. தான் இலைத் தழைகளை உண்ணப் போவதில்லை. தனக்கு மகிழ்ச்சி கிடைக்கப்போவதில்லை என்று சிங்கம் தனக்குள்ளே சொல்லிக்கொண்டது.

**நீதி** : பிறரை துன்புறுத்துபவன் மகிழ்ச்சியுடன் இருக்கமுடியாது.



**முனைவர். இரா. அகிலா.**
**மேலாண்மை துறை**

## பெண்கள்

மாதத்தில் மூன்று நாட்கள்
மடியில் வலியையும், மனதில்
வலிமையும் கொண்டவள்

அவளுக்கு பலம் பொருத்திய
இருக்கைகள் தேவையில்லை
கூர்மையா ஒரு பார்வை
போதும்”

ஆம்! பெண்கள் நம் கண்கள்
ஆனால் அவை ஏனோ
உறங்கிக் கொண்டே இருக்கின்றன.
ஒவ்வொரு முறையும் சிதைத்த
பின்னே விழுகின்றன.
போதும்!
சிதைக்கும் முன் விழித்திரு!!
சிதைக்க நினைத்தவரைச்
சிதைத்து விடு
சக்தியின் மறு உருவம் என
நிரூபித்து விட.

இன்னும் எத்தனை நாட்கள் தான்
கண்ணீர் வடிப்பாய் பெண்ணே
விழி நீர் உப்புடன்
விருந்துண்ணும்
வாழ்வில் விதி எழதியது யார் ?

நரகச் சிறையில் இடந்தந்தாலும்
காலம் இன்னுமா உனக்கு
விடுதலைக்காய் எழுந்தபோதெல்லாம்
சங்கிலிகளே நீள்கிறது

நிமிர்ந்து நடந்த போதெல்லாம்
குழிகளுக்குள் விழந்தாயா
வரதட்சனை, வன்கொடுமை
குறிவைக்கிறது உன் வாழ்வை
பூவாய் பாவனைவயில் வாழ்ந்தது
போதும்

மூட நம்பிக்கை மந்திரத்தை
தூக்கி ஏறி
பெண்ணே உனக்காக
வாழ்வாயா?



**முனைவர். பி. ஜெயலெட்சுமி**
**சமூகப்பணித்துறை**

## தஞ்சை வரலாறு

கி.பி. 655 ஆம் ஆண்டு முதல் கி.பி.850 வரை முத்தரையர்கள் என்ற குறுநில மன்னர்கள் தஞ்சைப் பகுதியை ஆட்சி புரிந்துள்ளனர். கி.பி.850 இல் தஞ்சாவூரை முத்தரையர்களிடமிருந்து விஜயாலய சோழன் கைப்பற்றித் தஞ்சை சோழர் ஆட்சியைத் தோற்றுவித்தார்.

பிற்கால சோழர்களின் தலைநகராகத் தஞ்சாவூர் திகழ்ந்தது. இராஜராஜசோழன் ஆட்சிக்காலத்தில் (985 - 1014) தஞ்சாவூர் நகரம் (நகரீயம்) மிக்க புகழ் எய்தியது. இராஜராஜசோழனின் மகனார் இராசேந்திர சோழர் தஞ்சையில் இருந்து தன்னுடைய தலைநகரை கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார்.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மதுரைப் பாண்டிய மன்னர்களின் எழுச்சியால் தஞ்சை பேரரசு வீழ்ச்சியடைந்தது. பாண்டியரின் வீழ்ச்சிக்குப்பின் தஞ்சாவூர் விஜயநகர அரசின் ஆட்சிக்குட்பட்டது. கி.பி.1532 இல் தஞ்சையில் நாயக்க மன்னர்களின் ஆட்சி தொடங்கிற்று. திருச்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த மதுரை நாயக்க மன்னர் சொக்கநாதர் கி.பி.1673 இல் தஞ்சாவூர் மீது படையெடுத்தார். இப்போரில் விஜயராகவன் தோல்வியுற்று போர்க்களத்தில் வீர மரணமடைந்தார். தஞ்சை அரசு மதுரை நாயக்க அரசுடன் இணைக்கப்பட்டது.

கி.பி.1676 இல் மராட்டிய மன்னர் சிவாஜியின் சகோதரர் வெங்காஜி தஞ்சையில் மராத்தியர் ஆட்சியை நிறுவினார். இரண்டாம் சரபோஜி (1798 - 1832) ஆங்கில கவர்னர் ஜெனரல் வெல்வெஸ்லி பிரபுவுடன் கி.பி.1799 இல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தஞ்சைக் கோட்டையத் தவிற மற்ற தஞ்சைக் கோட்டையைத் தவிர மற்ற தஞ்சை பகுதிகள் ஆங்கிலேயர் வசம் கொடுக்கப்பட்டன.

இரண்டாம் சிவாஜி (1832 - 1855) மன்னனுக்கு பிறகு ஆண் வாரிசு இல்லாமையினால் ஆங்கிலேயர்கள் வசம் கி.பி 1856 இல் ஆம் ஆண்டு முதல் நகராட்சியாக இருந்து வந்த தஞ்சை 2014 ஆம் ஆண்டு மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது.



**திருமதி. எஸ். மணிமேகலை**
**வரலாற்றுத்துறை**

## Microbiology and its important Companies in India

Microbiology is a broader term that includes several other branches like bacteriology, parasitology, mycology and virology. Microbiology can be defined as a study of microorganisms like prostist, fungi, prions, viruses, prokaryotes and eukaryotes as well. Microbiology is a research activity that is advancing continuously and many companies in India are specializing in the field of microbiology these days and the names of some of the companies that are shining in the field of microbiology in India such as Bharat Biotech, Biological E. Limited, Bartronics, Bioserve, GVK Biosciences Private Limited, Ocium Biosolutions Limited. Thus, these top microbiology firms offer the best service to the field of microbiology in the nation.

Biotechnology has been used exclusively over the years in fields such as medicine and agriculture. Most of the biotechnology companies are situated in the six important cities in India; mainly, Mumbai, Pune, Delhi, Bangalore, Hyderbad, Chennai and Ahamedabad. The top biotech companies in India include Biocon, Serum Institute of India, Panacea Biotech and Dr.Reddy's Laboratories Ltd

**National Entrance Tests for Phd/Job held in Monthwise details**

1. CSIR(Council of Scientific & Industrial Research) -UGC NET exam (University Grants Commission National Eligibility Test)- June and December http://csirhrdg.res.in/
2. NCBS (National Center for biological science)-December http://www.ncbs.res.in/phd_program.htm
3. DBT (Department of Biotechnology) -February- http://www.dbtindia.nic.in/
4. TIFR (Tata Institute of Fundamental Research)m-November- http://univ.tifr.res.in/gs2016/

1. ICMR (Indian Council of Medical Research)-July-http://icmr.nic.in/jrf.htm
2. NIMHANS (National Institute of Mental Health and Neuroscience) –February-http://www.nimhans.ac.in/
3. JNU (Jawaharlal Nehru University ) PhD Entrance- May-http://www.jnu.ac.in/
4. GATE (Graduate Aptitude Test in Engineering)-Feb-http://www.gate.iisc.ernet.in/
5. Manipal University http://www.manipal.edu.my/admission/apply-now/
6. NIPER (National Institute of Pharmaceutical Education and Research)PhD Entrance Exam-June-http://www.niper.ac.in/admissions.html
7. University of Hyderabad PhD Entrance Exam - June- http://www.uohyd.ac.in/index.php/admissions 1 2.GTU (Gujarat Technological University) PhD Entrance Exam- April -http://gtu.ac.in/PhD.asp
8. National Brain Research Centre, Ph.D Entrance Exam –May - http://www.nbrc.ac.in/academic_program.php
9. BITS (Birla Institute of Technology and Science) Pilani PhD Entrance Examination - June /July - http://bitsadmission.com/bitsatmain.aspx
10. AIIMS (All India Institute of Medical Science) PhD Entrance Exam-Jan, July - https://www.aiimsexams.org/index.html
11. IISC (Indian Institute of Science) PhD Entrance Exam -April-http://www.iisc.ernet.in/
12. NDRI(National Dairy Research Institute) PhD entrance exam-June-http://www.ndri.res.in/ndri/Design/education.html
13. Bhabha Atomic Research Centre (BARC) PhD Admission Test- February - http://www.hbni.ac.in/students/academic_prg.html
14. IISER (Indian Institute of Science Education and Research) Mohali PhD Admission



**Dr. S. Kalaiselvi**
**Department of Microbiology**

## அன்பு மகளே

பத்து மாதங்கள் கருவில் சுமந்தேன்
மூன்று மாதங்கள் கூட மடியில் சுமக்கவில்லை,
நீயோ தாய்மாமன் வீட்டில்
தாய் பால் ஊட்டாமல்
கல்வி பால் ஊட்ட
கல்லூரிக்கு சென்றுவிட்டேன்.

உண்ணவும் முடியவில்லை
உறங்கவும் முடியவில்லை
அனுதினமும் உன் நினைவு
ஞாயிறு எப்போது வரும் என்று
நீயும் நானும் காத்திருக்கிறோம் !
ஞாயிறு முடியும் தருவாயில்
என்னை விட்டு விலக மறுக்கிறாய்
கனத்த இதயத்தோடு வீடு திரும்புகிறேன்
அன்பு மகளே கலங்காதே !
நமக்கும் விடியல் வரும்
அந்த நாளிற்காக கண்ணீரோடு
காத்திருக்கும் உன் அன்பு தாய்.....



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

## Interesting Abbreviations

| | |
|---|---|
| NEWS | North East West South |
| CHESS | Chariot, Horst, Elephant, Soldiers |
| COLD | Chronic Obstructive Lung Disease |
| JOKE | Joy of Kind Entertainment |
| AIM | Ambition In Mind |
| DATE | Day And Time Evaluation |
| EAT | Energy and Taste |
| TEA | Taste And Energy Admitted |
| PEN | Power Enriched in Nib |
| SMILE | Sweet Memories In Lips Expression |
| BYE | Be with You Everytime |



**Smt. S. Vanitha**
**Dept. of Social Work**

## வரலாற்றுத் துணுக்குகள்

முகலாயர் வம்சத்தில் ஆண்களுக்கு நிகர் பெண் ஒருவர் ஆட்சி செய்தார் என்றால் அது நூர்ஜஹான் பேகம் என்ற பெண்புலி தான். ஒருமுறை வேட்டைக்கு கிளம்பும் போது 4 புலிகளை வீழ்த்த 4 ரவைகளே போதும். அதில் வீழ்த்திக் காட்டுகிறேன் என்றாராம். ஆனால் 1 ரவை அதிகமாக தேவைப்பட்டதை எண்ணி வருந்தினாராம். அந்த அளவிற்கு குறிபார்த்து துப்பாக்கி சுடுவதில் வல்லவர். அதுமட்டுமல்லாமல் பேகம் கண்ணசைத்தால் தான் நிர்வாகமே இயங்கும். பெயருக்காக தான் ஜஹாங்கீர் அரசராக இருந்தான். அனைத்து அதிகாரமும், பேகம் கையில் தான் இருந்தது. பின்னால் இந்தியாவை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்கள் முதன் முதலில் சூரத்தில் வணிகதளம் அமைக்க சில வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பல நிபந்தனைகளை விதித்து உரிமம் வழங்கினார். இன்றும் பயன்படுத்தப்படும் அர்தார் என்னும் வாசனை திரவியத்தை முதன்முதலில் உருவாக்கியவர் நூர்ஜஹான். அந்த வாசனையில் மூழ்கி மன்னர் சிறப்பு பரிசளித்தார். புது புது விதமான அலங்கார ஆடைகள் நெய்வதிலும், கவிதை எழுதுவதிலும் வல்லவர். ஏழை பெண்கள் பலருக்கு இலவச திருமணங்கள் நடத்தி வைத்தார். சிறந்த நிர்வாகி, ராஜ தந்திரி, காலம் கடந்தும் அவரது புகழை வரலாறு என்றும் பேசும்.



**முனைவர். கோ. ஜெகதீஸ்வரி**
**வரலாற்றுத் துறை**

## 10 steps for Healthy Life

0 hours of television
1 hour of exercise
2 litres of milk
3 cups of hot green tea
4 short mental break
5small meals
6 am wake up time
7 minutes of laughter
8 hours of sleep
9 pm go to bed
10 minutes of prayer



**Smt. M. Chandra**
**Dept. of Social Work**

# சிந்தனைத் துளிகள்

## மகாபாரதம் - எனக்குப் பிடித்தது

மகாபாரதத்தில் எனக்கு மிகவும் பிடித்த வசனம்
நீ எத்தனை பாவம் வேண்டுமானாலும்
செஞ்சிட்டே இரு...
ஆண்டவன் முதல்ல உன்னை
ஒன்றும் செய்யமாட்டான்
ஆனா... நீ என்னைக்கு உன்னோட
ஆட்டத்தை நிறுத்திட்டு
போதும் என்று ஓய்வு எடுப்போம்னு
ஒதுங்கும்போது தான்
ஆண்டவன் அவனோட
ஆட்டத்தை ஆரம்பிப்பான் !



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

## கோபத்தைக் கொன்றுவிடு

கோபம் பெற்றுத் தருகின்ற குழந்தை தான் ஆத்திரம். அந்த ஆத்தரத்திற்கு அடிமையானவன் கொண்ட கொள்கையே குழிதோண்டிப் புதைத்து விடுவான். ஏனென்றால் அவன் மனித நிலை மாறி மிருகநிலைக்கு வந்தடைந்து விடுவதால் !

நமக்குப் பிடித்தமானதை ஒருவர் செய்யும்போது நமது நெஞ்சம் அகமகிழ்கிறது. ஆனால் அதுவே மாறுபடும்போது கோபம் தன்னால் வருகிறது. உங்கள் மனதில் கோபம் தோன்றுமானால், அப்போது நீங்கள் எதையும் செய்யாதீர்கள். எதைப் பற்றியும் பேசாதீர்கள். ஏன்றால் கடலில் புயற்காற்று வீசுகின்றபோது அதில் குளிக்க இறங்கியவனின் கதைபோல் ஆக்கிடும் !

கோபத்தை அடக்கமுடியாதவர்கள் கோபம் வரும்படியான சந்தர்ப்பத்திற்கு இடம் கொடுத்தல் கூடாது. நன்மை, தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலை இழந்து விடுகின்றது. அதனால் அறிவை இழக்கின்றான். புகழை இழக்கின்றான். பெருமையை இழக்கின்றான். சொந்தத்தையும், சுற்றத்தையும் இழக்கின்றான். முடிவில் மானத்தை இழந்து மதிகெட்ட மனிதனாகி சீரழிவான். எனவே கோபம் உன் உள்ளத்தில் கிளர்ந்தெழுகின்ற போதெல்லாம் அதைக் கொன்றிடு.

வாழ்க தமிழ் !



**முனைவர். எஸ். மெட்டில்டா டெய்சி**
**தமிழ்த் துறை**

## Remember

The happiest people are not those getting more, but those giving more.
Remember,
Strong People stand up for themselves. But the strongest people stand up for others.
Remember,
I am light house rather than life boat, I do not rescue but instead help others to find their way to share, guiding them by my example.



**Smt. R. Samundeeswari**
**Dept. of Social Work**

## உடல் நலக் குறிப்புகள்

- 5 அல்லது 8 பூண்டு பற்களை நன்றாக வேகவைத்து பாலில் கலந்து காலை, மாலை என இருவேளையும் குடித்துவந்தால் உடம்பில் உள்ள கெட்ட கொழுப்பு கணிசமாக குறைந்துவிடும்.
- முருங்கைகாயை நசுக்கி அதனுடைய சாற்றினை எடுத்து அத்துடன் சமஅளவு தேன்கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் சளி பிரச்சனை குறையும்.
- சுக்குப்பொடி குழம்பு செய்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல், ஆஸ்துமா போன்றவை வராமல் பார்த்துக் கொள்ளலாம்.
- நெய் உணவில் சேர்த்துக்கொண்டால் நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும்.
- தினமும் இஞ்சி சாப்பிடுவதால் இரத்த ஓட்டம் சீராகி பசியுணர்வு அதிகரிக்கும்



**திருமதி. எம். சந்திரா**
**சமூகப்பணித் துறை**

## Health Tips

| | | |
|---|---|---|
| 1 Apple / day | : | No Doctor |
| 1 Tulsi / day | : | No Cancer |
| 1 Lemon / day | : | No Fat |
| 1 cup Milk / day | : | No Bone Problems |
| 3 ltrs water / day | : | No Diseases |



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

# சிந்தனைத் துளிகள்

**இந்த செல்போன் வந்தாலும் வந்திச்சு ......**

1. கையில் கடிகாரம் கட்டினது போச்சு
2. கால்குலேட்டர் போச்சு
3. கடிதம் எழுதுவது போச்சு
4. கேமரா போச்சு
5. காலண்டர் போச்சு
6. ரேடியோ போச்சு டேப்ரெகார்டர் போச்சு
7. சிடி போச்சு
8. அலாரம் வைக்கும் கடிகாரம் போச்சு
9. நிம்மதி போச்சு
10. நீ சார்ஜ் செய்து செய்து
11. கையில் இருக்கிற காசும் போச்சு..,



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

## அறிஞர்களின் பொன்மொழிகள்

நல்ல நண்பனாக விரும்பினால் - நீ
நல்ல நண்பனாக இரு.

மகிழ்ச்சி என்பது பெறுவதில் அல்ல – மாறாக
பிறருக்கு கொடுப்பதில் தான் உள்ளது.

பதவியைப் பார்த்து உதவி கேட்காதீர்கள்
நல்ல மனிதரைப் பார்த்து உதவி கேளுங்கள்.

புத்தகங்கள் என்பது மனித சமூகத்தின்
பேரறிஞர்கள் விட்டுச் சென்ற மிகப் பெரிய
சொத்து.

வாழ்க்கையில் முந்த வேண்டும்
வளைவுகளில் முந்த வேண்டாம்.

புத்திசாலிகளிடம் யோசனை கேட்பதை விட
அனுபவசாலிகளிடம் ஆலோசனை கேள்.

வாய்ப்புக்காக காத்திருக்காதே – உனக்கான
வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்
ஆனால்
நமது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கட்டும்.



**முனைவர். இரா. அகிலா.**
**மேலாண்மை துறை**

## Important days

| | | |
|---|---|---|
| January 4 | : | World Braille Day |
| January 5 | : | World Hindi Day |
| January 25 | : | National Voters Day |
| February 28 | : | National Science Day |
| March 22 | : | World Day for Water |
| March 24 | : | World TB day |
| April 22 | : | Earth Day |
| April 23 | : | World Book Copyright Day |
| May 15 | : | International Day Of Family |
| May 24 | : | Common Wealth Day |
| May 31 | : | Anti Tobacco Day |
| June 21 | : | International Day For Yoga |
| June 26 | : | International Day Against Drug Abuse |
| July 26 | : | World Population Day |
| July 29 | : | National Sports Day |
| August 29 | : | International Literacy Day |
| September 8 | : | World Heart Day |
| September 29 | : | World Post Office Day |
| October 9 | : | National Girl Child Day |
| October 9 | : | World Tsunami Day |
| November 5 | : | Diabetes Day |
| November 14 | : | National Epilepsy Day |
| November 17 | : | World Aids Day |
| December 1 | : | National Mathematics Day |
| December 22 | : | National Consumers Day |



**Smt. M. Chandra**
**Dept. of Social Work**

## செல்லம்மா

வேதனைகளை
சில உண்மையான
உறவுகளுக்கு
வெளிப்படுத்தாமல்
பொய்யாக சிரித்து
வாழ்கிறேன் இவ்வுலகில் !



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

## சிந்தனைத் துளிகள்

| | | |
|---|---|---|
| வணங்க வேண்டியது | - | தாய் |
| நல்ல நாள் | - | இன்று |
| பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| அவசியம் | - | பணிவு |
| வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | நம்பிக்கை |
| கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபம் | - | குற்றம் காணல் |
| தேவையற்றது | - | பொறாமை |
| நம்ப கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகபேச்சு |
| செய்யக்கூடாதது | - | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக்கூடியது | - | உதவி |
| விலக்கவேண்டியது | - | சோம்பேறித்தனம் |
| நழுவவிடக்கூடாதது | - | வாய்ப்பு |
| பிரியக்கூடாதது | - | நட்பு |
| மறக்கக்கூடாதது | - | நன்றி |



**முனைவர். பி. சங்கீதா**
**கணிதவியல் துறை**

## பெண்ணின் மனஉறுதி

எரிந்து விடு பெண்ணே
எல்லை மீறும்
கொடுமைகளை...
மரித்துபோகும் நிமிடம் வரை
மனதில் உறுதி வரமாகும்....!
மரித்துபோகும் நிமிடம் வரை
மனதில் உறுதி வரமாகும்

## POVERTY

"Poverty is that
Made by God. It is
Created by you
And me when we
Don't share that
We have"



**Smt. M. Karthika**
**Department of Social Work**

## உலகச் செய்திகள்

கல்கத்தாவைச் சேர்ந்த முகமது மசதுார் ரகுமான் வைத்தயார் தமது 28 வயதில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தார். இரண்டு கால்களையும் இழந்தும் இச்சாதனையை நிகழ்த்திய இவரே ஆசியாவின் முதல் வீரராவார்.

பூமி சுற்றுவதை நிறுத்தினால்: மேற்கிலிருந்து கிழக்காக சுற்றும் பூமி தன் சுழற்சியை திடீரென நிறுத்தினால் பூமியில் உள்ள அத்தனை உயிரினங்களும் சுமார் 1670 கி. மீ. வேகத்தில் கிழக்கு நோக்கி வீசியெறியப்படும்.

கனடா நாட்டைச் சேர்ந்த "போல்" என்பவர் மூன்று டன் எடையுள்ள பெரிய டிராக்டரை தன் முதுகின் மேல் ஏந்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார். ரிமோட் கன்ட்ரோல் உதவியுடன் இவர் தரையில் படுத்திருக்கும் போது இவரின் உதவியாளர் இயக்க, டிராக்டர் தானே இவரின் முதுகின் மேல் இறங்குகிறதாம்.



**முனைவர். இரா. அகிலா.**
**மேலாண்மை துறை**

## பெண்ணே !

எழுந்துவாடி பெண்ணே
பெண்ணே நீயும் பொம்மை அல்ல
பெட்டிப்பாம்பாய் இருந்தது
போதும்...!
மண்ணை பிளத்து முளைக்கும்
விதையே
மரமாய் உயர்ந்து மண்ணை
ஆளும்...!
கூட்டுபுழுவின் வாழ்க்கை போல
வீட்டுக்குள்ளே சிறை
வேண்டாம்...!
உடைத்து விட்டு வெளியே வந்தால்
உலகம் உந்தன் வாசல்படி...!
அச்சத்தோடு நீயிருந்தால்
அழகும் கூட ஆபத்தாகும்...!
உச்சகோபம் நீ கொண்டால்
உதிரம் கூட அனலாகும்.




**மா.கார்த்திகா**
**சமூகப்பணித்துறை**

## PUZZLE

### 1. COUNT THE SQUARES

Guess how many Squares are there in this figure.




**Ans** : 11 Squares


### 2. Divide the Crescent

Here is a Crescent

Can you divide it into six parts by drawing just two Straight lines?



**Ans** :





**முனைவர். பி. கலைச்செல்வி**
**கணிதவியல் துறை**

## LIFE

"Some people come
In your life as
Blessing
Some come in your
Life as lessons"



**Smt M.Karthika**
**Department of Social Work**

## நமது உடலின் உறுப்புகள் அஞ்சி நடுங்குவது எதனால் ?

| | |
|---|---|
| சிறுநீரகம் | நீண்டநேரம் கண்விழித்தல், தூக்கமின்மை |
| வயிறு | குளிரூட்டப்பட்ட உணவுகள் |
| நுரையீரல் | புகைப்பிடித்தல் |
| கல்லீரல் | கொழுப்பு சத்து நிறைந்த உணவுகள், மது அருந்துதல் |
| இதயம் | உப்பு நிறைந்த உணவு வகைகள் |
| கணையம் | அதிகப்படியான நொறுக்குத் தீனி |
| குடல் | கடல்சார் உணவுகளை பாகுபாடின்றி மிகுதியாக உண்பது |
| கண்கள் | அலைபேசி, கம்ப்யூட்டர் திரைகளை அதிகநேரம் பார்ப்பது |
| பித்தப்பை | காலை உணவைத் தவிர்ப்பது |

நம்மைப் பாதுகாத்துக் கொள்வது நமது கடமை. ஏனெனில் பழுதடைந்துவிட்டால் இந்த உதிரிபாகங்கள் எளிதாக கிடைக்காது. அதிகமான செலவு பிடிக்கும். அசல்போல் இருக்காது.
"உண்ணும் உணவில் கவனம் தேவை
வாழ்க்கை முறையில் கவனம் தேவை"



**திருமதி. எஸ். வனிதா**
**சமூகப்பணித் துறை**

## செய்தி துணுக்கு

வளர்ந்த பிறகு
பென்சிலுக்கு பதிலாக
பேனாவை உபயோகிப்பது
எதற்காக என்று தெரியுமா ?
இனிவரும் காலங்களில் நாம்
செய்யும் தவறுகளை
திருத்துவதும் அழிப்பதும்
கடினம் என்று
உணர்த்துவதற்கு தான்.



**திருமதி. டி. சுகாசினி**
**சமூகப்பணித் துறை**

## உதவி

"இரு கை கூப்பி கடவுளை
வணங்குவதை விட
ஒரு கை நீட்டி உதவிசெய்
இரு கை உன்னை
வணங்கும் கடவுளாக"



**மா.கார்த்திகா**
**சமூகப்பணித்துறை**

## Money is not Everything

What we require for our happiness is not what money can buy. An important quote says, Money can get us :

A book, but not brains,
A house, but not home
A medicine, but not health
Amusement, but not happiness
A bed, but not sleep
Clothes, but not beauty
Luxurious, but not culture
A church, but not heaven
A friend but not friendship
An idol, but not God !

God has gifted life to millions of creatures on earth and man is one of them. Our beautiful mother nature with its richness of life is surviving since time in memorial - not with money but with love and affection.

Our most basic necessities in life are air, water and food but most important of all is love. To live a happy life, we should live life to the fullest. To help someone, to have everybody around us, to make others happy we dont need money.

A person is not happy if he has lot of money and luxurious, but he is happy only if he is satisfied in life. He needs to be content with what life gives him because, "Money is not Everything, it is only something. It is only for our living, not for life".



**Dr. A. Sivagami**
**Department of Social Work**

## சிகரெட் விளம்பரம்

சிகரெட்டின் தீமைகள் தெரிய வருவதற்கு முன் விளம்பரம் செய்ய எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அமெரிக்காவின் லோரி லார்ட் என்கிற புகையிலை கம்பெனி தான் 1789 முதல் சிகரெட் விளம்பரத்தை உலகில் பற்றவைத்தது. போக்குவரத்து வசதிகள் அவ்வளவாகப் பெருகாத காலம் என்பதால் லோக்கல் பகுதியைத் தாண்டி வளரவில்லை. 1870-ம் ஆண்டு சிகரெட் உற்பத்தி செய்யும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு நான்கு மில்லியன் சிகரெட்டுகளை உற்பத்தி செய்தது.

1880-களில் வண்ணங்களை உபயோகித்து அச்சடிக்கும் அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1950-களில் சிகரெட் கம்பெனிகள் போட்டியைச் சமாளிக்க சிகரெட் லேபிள்கள் மீது கவனம் ஈர்க்கும் வரிகளை எழுதின.

சிகரெட்டினால் புற்றுநோய் அதிகரிப்பதை உணர்ந்துகொண்ட பத்திரிகைகள், சிகரெட் விளம்பரங்களை வெளியிட மறுத்தன. உடனே புகையிலை கம்பெனிகள், மருத்துவர்கள், டென்டிஸ்டுகள் ஆகியோரை வைத்து சிகரெட் நல்லது என்கிற விளம்பரங்களைத் தொடர்ந்து வெளியிட்டன. 1964-ல் யு.எஸ். சர்ஜன் ஜெனரல் லூதர் டெர்ரி என்பவர் “புகை பிடித்தலும் ஆரோக்கியமும்” என்ற ஆய்வறிக்கையில் சிகரெட் குடிப்பதால் நுரையீரல் புற்றுநோய் வரும் என்று கண்டுபிடித்தார். அதன் பின்னர்தான் சிகரெட் விளம்பரங்களில் எச்சரிக்கை வாசகங்கள் இடம் பெற்றன.



**முனைவர். பி. அபிராமி**
வணிக மேலாண்மைத் துறை

## வாழ்வின் ரகசியம்

முந்திக்கொண்ட முதல் செங்கல்
கோவிலின் அடித்தளத்தில்
நின்று விடும்.
காத்திருந்த கடைசி செங்கல்தான்
கலசம் தொடும்
சாதிக்க பொறுமை மிக மிக
அவசியம்......!
விலை மதிப்பற்ற செல்வம் - அறிவு !
பலமான ஆயுதம் - பொறுமை !
மிகச் சிறந்த பாதுகாப்பு - உண்மை !
அற்புதமான மருந்து - சிரிப்பு !
தாயிடம் அன்பாக பேசுங்கள் !
தந்தையுடன் பண்பாக பேசுங்கள் !
ஆசிரியரிடம் அடக்கமாக பேசுங்கள் !
துணைவியிடம் உண்மையாக பேசுங்கள் !
சகோதரனிடம் அளவாக பேசுங்கள் !
சகோதரியிடம் பாசத்தோடு பேசுங்கள் !
குழந்தைகளிடம் ஆர்வத்தோடு பேசுங்கள் !
உறவினர்களிடம் பரிவோடு பேசுங்கள் !
அதிகாரியிடம் பணிவோடு பேசுங்கள் !
வியாபாரியிடம் கறாராக பேசுங்கள் !
வாடிக்கையாளரிடம் நேர்மையாக பேசுங்கள் !
தொழிலாளரிடம் மனிதநேயத்தோடு பேசுங்கள் !



**முனைவர் ப. சித்ரா**
தமிழ்த் துறை

# கல்லூரி விழாக்கள்


பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி
ஒரத்தநாடு - 614 625
மகளிர் மேம்பாட்டு மன்றம் - நடத்தும்
மகளிர் தின விழா
08


மகளிர் மேம்பாட்டு மன்றம் - நடத்தும்
08


பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி
08




பல்கலைக்கழக
ஒரத்தநாடு - 614 625



# கல்லூரி விழாக்கள்








பாரதிதாசன் பல்கலைக்கழக
ஆண்டு







## சமூகப்பணித் துறையின் “கார்கோ“ நிகழ்வுகள்












9th Cargo
Programme
4 - 8 Feb 2019






9th Cargo
Programme
4 - 8 Feb 2019


Influence / Inspire / Ignite
9th Cargo
Programme




# நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்









NATIONAL SERVICE SCHEME
BHARATHIDASAN UNIVERSITY CONSTITUENT COLLEGE FOR WOMEN
ORATHANADU- 614 625

**NSS ORIENTATION PROGRAMME**

We cordially invite you for the NSS Orientation Programme for the newly enrolled NSS Volunteers of our college at 2.00 PM on 9th August 2018.

**Dr.T.Malarvili**
**Principal**
**Bharathidasan University Constituent College for Women, Orathanadu**
has kindly consented to deliver the Inaugural Address.

**Dr.R.Chithiravel**
**NSS Programme Officer**
**&**
**Assistant Professor of Chemistry**
**Rajah Serfoji Govt. College(A), Thanjavur**
has kindly consented to act as Resource Person and deliver the Special Address.

**Organizing Secretaries**

**Dr.M.Premavathy**
**Dr.K.R.Sarala**
**Ms.M.Elambirai**

**NSS Programme Officers**
**Bharathidasan University Constituent College for Women, Orathanadu .**



**Awareness on Menstrual Hygiene Management**
*Jointly organized by*
**Menstrual Hygiene Management Consortium (MHMC)**
**Clinical Research Committee**
**Youth Cell**
**Federation of Obstetric & Gynecological Societies of India (FOGSI)** and
**Shirdi Sri Thayumana Saibaba Seva Project**

**CERTIFICATE**

This is to certify that M/s. P. Ranjani of I B.com Constituent College, Orathanadu, Thanjavur participated in the Slogan writing Competition jointly organized by Menstrual Hygiene Management Consortium (MHMC), Clinical Research Committee, Youth Cell, Federation of Obstetric & Gynecological Societies of India (FOGSI) and Shirdi Sri Thayumana Saibaba Seva Project at Garbarakshagi Mahal, Cantonment, Trichy on 27th July 2018 (Friday) in the Theme "Menstrual Hygiene Management".

She won the III rd Prize.

**Dr. K. Meena**
Vice - President, MHMC
Former Vice-Chancellor, Bharathidasan University

**Dr. Jayam Kannan**
Executive Committee Member, MHMC
Vice - President, FOGSI


**Dr. Charmila Ayyavoo**
President, MHMC
Chairperson, Clinical Research Committee, FOGSI





# நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்





NATIONAL SERVICE SCHEME
BHARATHIDASAN UNIVERSITY CONSTITUENT COLLEGE FOR WOMEN
ORATHANADU- 614 625
LIONS CLUB, ORATHANADU- 614 625
&
VASAN EYE CARE, THANJAVUR

EYE CARE CAMP
(9th & 10th August 2018)

We cordially invite you for the Eye Care Camp for students and staff members of our college at 9.30 AM on 9th August 2018.

Dr.T.Malarvili
Principal
Bharathidasan University Constituent College for Women, Orathanadu
has kindly consented to deliver the Inaugural Address.


Mr.S.Ramesh
President, LIONS CLUB, Orathanadu

Mr.M.RajKumar
Vasan Eye Care,Thanjavur
has kindly consented to deliver the Felicitation Address.

Organizing Secretaries
Dr.M.Premavathy
Dr.K.R.Sarala
Ms.M.Elambirai

NSS Programme Officers
Bharathidasan University Constituent College for Women, Orathanadu .













கண் பரிசோதனை முகாம்

ஒரத்தநாடு, ஆக.

ஒரத்தநாடு, நாட்டு நலப்பணித்திட்டம், பாரதிதா
பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, ஒரத்தநா
லயன்ஸ் கிளப், தஞ்சை வாசன் கண் மருத்துவமனை,
ஆகியவை இணைந்து நடத்திய கண் பரிசோதனை முகா
நடைபெற்றது. இவ்விழாவில் நாட்டு நலப்பணித்திட்
அலுவலர் முனைவர் மா.பிரேமாவதி வரவேற்புரைய

னார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் சரளா அறிமு
உரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் தே.மலர்வி
தலைமையுரையாற்றினார். ஒரத்தநாடு, லயன்ஸ் கிள
தலைவர் எஸ்.ரமேஷ், வாசன் கண் மருத்துவமனை
எம்.ராஜ்குமார் கலந்துகொண்டு வாழ்த்துரை வழ
இறுதியாக, நாட்டு நலப்பணித்திட்ட



# நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்





**கல்லூரியில் கண் பரிசோதனை முகாம்**

ஒரத்தநாடு: பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி நாட்டுநலப்பணி திட்டம் சார்பில் கண் பரிசோதனை முகாம் நடந் தது. பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி, லயன்ஸ் கிளப், வாசன் கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து கண் பரிசோதனை முகாம் தொடக்கவிழா நடந்தது. என்எஸ்எஸ் அலுவலர் பிரேமாவதி வரவேற் றார். திட்ட அலுவலர் சரளா அறிமுக உரையாற்றினார். முகாமை கல்லூரி முதல்வர் மலர்விழி தொடங்கி வைத்தார். லயன்ஸ் கிளப் தலைவர் ரமேஷ், வாசன் கண் மருத்துவமனை ராஜ்குமார், கல்லூரி மாணவிகள், பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். என்எஸ்எஸ் அலுவலர் இளம்பிறை நன்றி கூறினார்.









NATIONAL SERVICE SCHEME
ON
Date:25.09.2018


COLLEGE FORWOMEN
ANADU- 614 625
&
செப்டம்பர் 10





# நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்






படும் எனத் தெரிவித்தார்.

## மனநல விழிப்புணர்வு முகாம்

ஒரத்தநாடு: ஒரத்தநாடு பாரதிதாசன் பெண்கள் கல்லூரியில் மனநல விழிப்புணர்வு முகாம் நடந்தது. முகாமை கல்லூரி முதல்வர் மலர்விழி தொடங்கி வைத்தார். ஆலோசனை மற்றும் குறை தீர்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரளா வரவேற்றார். இம்முகாமில் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை தலைமை மருத்துவர் மங்கையர்கரசி மனநல பாதுகாப்பு போதை பொருள் தடுப்பு, தற்கொலை எண்ணங்களை தவிர்த்தல் தொடர்பாக கருத்துக்களை எடுத்துரைத்தார். அவ்வமயம் மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி போன்ற மனநலம் தொடர்பான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. ஆங்கிலத்துறை தலைவர் பிரேமாவதி நன்றி கூறினார். நிகழ்ச்சியை தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் மங்களநாயகி தொகுத்து வழங்கினார்.









LIONS CLUB
ORATHANADU
175 ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதி



# நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்








## பெண்கள் கல்லூரியில் ரத்த தான முகாம்

ஒரத்தநாடு பாரதிதாசன் பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற ரத்த தான முகாம்.

ஒரத்தநாடு, செப். 29: ஒரத்தநாடு பாரதிதாசன் பெண்கள் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் லயன்ஸ் கிளப் சார்பில் ரத்த தானம் முகாம் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம், ஒரத்தநாடு லயன்ஸ் கிளப் ஆகியவை இணைந்து உலக நாய்க்கடி தினத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமை ரத்த தான முகாமை நடத்தின. இந்த முகாமுக்கு கல்லூரியின் முதல்வர் தே. மலர்விழி தலைமை வகித்தார். ஒரத்தநாடு அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவர் வெற்றிவேந்தன் முகாமை தொடங்கி வைத்தார். நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களான ஆங்கிலத் துறைத் தலைவர் மா.பிரேமாவதி, தமிழ்த் துறைத் தலைவர் கு. சரளா ஆகியோர் இம் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

முகாமில் ரத்த தானத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மாணவிகள் பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டு ரத்தம் தானம் செய்தனர். இந்த முகாமில் பேராசிரியர்களும், மாணவிகள் பலரும் பங்கேற்றனர்.









## பெண்கள் கல்லூரியில் மனநல விழிப்புணர்வு முகாம்

ஒரத்தநாடு, செப். 29: உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு, ஒரத்தநாடு பாரதிதாசன் பெண்கள் கல்லூரியில் மனநல விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட இந்த முகாமை கல்லூரி முதல்வர் தே. மலர்விழி தொடக்கிவைத்து தலைமையுரையாற்றினார். கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையின் தலைமை மருத்துவர் பி. மங்கையர்கரசி, மனநலம், போதைப்பொருள் தடுப்பு, தற்கொலை எண்ணங்கள் தொடர்பாக பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார். மனநலம் தொடர்பாக மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் சமம் எனும் தலைப்பில் பெண்ணின் பெருமையை வெளிப்படுத்தும் விதமாக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை ஊழியர்கள் நாடகம் நடத்தினர்.

முன்னதாக, ஆலோசனை மற்றும் குறைதீர்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் கு.ர. சரளா வரவேற்றார். நிறைவில், நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் ஆங்கிலத் துறை தலைவர் மா. பிரேமாவதி நன்றி கூறினார். தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் இரா. மங்களநாயகி தொகுத்து அளித்தார்.



## கல்லூரிச் சுவடுகள்





















# கல்லூரிச் சுவடுகள்




















# ஆண்டு மலர் 2018 - 19



பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி

ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்